பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 01 வெள்ளிக்கிழமை (17.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 233

# புலிகளை எதிர்ப்பதில் சில நாடுகள் நேர்மையாகச் செயற்படவில்லை

## அணிசேரா மாநாட்டில் ஆற்றிய உரையில் ஜனாதிபதி விசனம்




சரம் எல் ஷெய்க், ஜூலை 17

நாம் வெற்றி கொண்ட பயங்கரவாத இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் அல்ல. வன்முறையில் பெருமை காணும் தேசிய விரோதப் பிரிவினைவாத அமைப்பு அது. இந்த அமைப்பை எதிர்ப்பதில் சில நாடுகள் நேர்மையாகச் செயற்படவில்லை.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றுகையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு விசனம் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண புதிய ஆளுநர் இன்று பதவியேற்கின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வட மாகாண ஆளுநர் பதவிக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இன்று உத்தியோக பூர்வமாகப் பதவியேற்கின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**உள்ளே**

தரம் 4 மாணவர்களுக்கான பரீட்சை மாதிரி வினாத்தாள்

## இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் பணியின் முன்னேற்றம் குறித்து இந்தியப் பிரதமரிடம் நேரில் விவரித்தார் மஹிந்த

சரம் எல் ஷெய்க்,ஜூலை 17

வடக்கில் நடைபெற்ற போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை 180 நாள்களில் மீள்குடியமர்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இந்தியப் பிரதமரிடம் நேரில் எடுத்துக் கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கெய்ரோவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையே நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மீள்குடிய மர்த்தும் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துவிவரித்து விளக்கினார்.

இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக மன்மோகன் சிங்குக்கு எடுத்து விளக்கிய ஜனாதிபதி மஹிந்த, வடக்கை மீளக் கட்டியெழுப்பும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என்றும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் பணியை 180 நாள்களில் பூர்த்தி செய்ய விரைந்து நடவடிக்கை எடுத்து வரு வதாகவும் இந்தியப் பிரதமரிடம் கூறினார்.

மீள் குடியமர்வுப் பணிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை தமது நாடு ஒதுக்கியிருப்பதை மன்மோகன் சிங் சுட்டிக்காட்டினார். (அ-1)

## மீளக்குடியமர்த்தும் பணியின் முன்னேற்றத்தை நேரில் கண்டறிய பான் கீ - மூன் வருகிறார்



கெய்ரோ, ஜூலை 17

இலங்கையில், போர் நடைபெற்ற பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் பல கஷ்டங்கள், துன்பங்கள் மத்தியில் வசித்து வரும் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகளின் முன்னேற்றத்தை நேரில் கண்டறியும் பொருட்டு - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் விரைவில் (16ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா வருடாந்த உற்சவத்துக்கு குடாநாட்டு மக்களும் செல்வதற்கு வசதி செய்யப்பட வேண்டும்

### யாழ். வந்த ஐ.தே.க. பிரமுகர் ஜயலத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

மடுத் தேவாலயத்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் வருடாந்தப் பெருவிழாவில் குடாநாட்டு மக்களும் பங்குபற்ற போக்குவரத்து வசதி செய்யப்பட வேண்டும்.

ஐ.தே.கட்சியின் உதவிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் நேற்று மாலை யாழ். ஆயர் அதி வண தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அச்சந்திப்பை அடுத்து உதயனுக்கு கருத்து வெளியிட்ட டாக்டர் ஜயலத் தெரிவித்ததாவது:-

வடக்குப் பிரதேசம் விடுவிக்கப்பட்ட பின்னர் அடுத்த மாதம் 15 ஆம் திகதி நடைபெறும் மடுத் தேவாலயத்தின் வருடாந்த விசேட உற்சவத்தை பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசு பெரிய அளவில் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளது.

சமாதானத்தின் சின்னமாக விளங்கும் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல்களை கண்காணிக்க ஜப்பானிய அரசு நிதியுதவி

### 'பவ்ரல்' அமைப்பு பணியில் ஈடுபடும்

கொழும்பு, ஜூலை 17

யாழ்.மாநகரசபை, வவுனியா நகரசபை மற்றும் ஊவா மாகாண சபை ஆகியவற்றின் தேர்தல்கள் வன்செயல்கள் இன்றி சுதந்திரமாகவும் நீதியானதுமாக நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிக்கும் பணிகளில் 'பவ்ரல்' அமைப்பு ஈடுபடவுள்ளது.

இந்தத் பணிகளை முன்னெடுக்க ஜப்பானிய அரசாங்கம் 11 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. ஜனநாயக செயற்படுதிறனை விருத்தி செய்வதற்கான இலக்குடன் தேர்தல் கண்காணிப்புத் திட்டம் என்ற வகையில் இந்த உதவி வழங்கப்படுவதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

அடிமட்ட மனித பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் ஜப்பான் வழங்கும் இந்த நிதி (16ஆம் பக்கம் பார்க்க)

## துன்பத்தில் வாடும் தமிழ் மக்களுக்கு இந்த அரசால் தீர்வு தர இயலாது

### ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்குத் தமிழர்கள் துன்பத்தில் வாடுகிறார்கள். அவர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவர்களுக்குச் சமமான உரிமைகளை வழங்கவேண்டியது அரசின் கடமை. தற்போதைய அரசு தனிப்பட்ட அரசாக இருப்பதால், தமிழ்மக்கள் தொடர்ந்தும் கஷ்டப்படுகிறார்கள். இந்த அரசினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

- இப்படி ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## காவலில் உள்ள இரு ஐ.நா. பணியாளர்களையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவு

### அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் உயர்நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, ஜூலை 17

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐ.நா.பணியாளர்கள் இருவரையும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர் செய்து, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அந்த மருத்துவ அறிக்கையை அடுத்த இரண்டு வார காலத்துக்குள் உயர்நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கும்படி உயர்நீதிமன்றம் நேற்று அரசுத் தரப்பைப் பணித்தது.

சாள்ஸ் இரவீந்திரன் நவரட்ணம்(வயது- 45), (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐ.தே.கட்சியின் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க, யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான ஐ.தே. கட்சியின் அமைப்பாளர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளர் என். சத்தியேந்திரா மற்றும் வேட்பாளர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வருகை தந்து வழிபாட்டில் கலந்து கொள்வதையும் வழிபாட்டின் பின் வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை களைந்து முன்வைக்கப்படும் தீர்வை ஐ.தே.க. பரிசீலிக்கும்

## கிளியைப் பிடித்து கூண்டில் அடைத்து வைத்து உணவளித்தால் அது சந்தோஷமாக இருக்குமா எனக் கேட்கிறார் ஜயலத்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வையே ஐ.தே.கட்சி வலியுறுத்துகிறது.

அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளை நீக்கி ஒட்டுமொத்தமாக அரசு முன்வைக்கும் தீர்வை பரிசீலிக்க ஐ.தே.க தயாராக இருக்கிறது.

இப்படிக் கூறினார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசிடம் தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை. விமல் வீரவன்ஸ, ஹெலஉறுமய, திஸ்ஸவிதாரண ஆகியோருக் கிடையில் முரண்பாடு காணப்படுகின்றது. அரசுடன் இணைந்த ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு விதமான அபிப்பிராயங்களே காணப்படுகின்றன.

அந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டு அரசு தீர்வை முன்வைக்கவேண்டும்.

அகதி முகாம்களில் உள்ள மக்கள் அடிமைகள் போல் நடத்தப்படுகின்றனர். தமிழ் மக்கள் தமதுவாயைத் திறக்க அஞ்சுகின்றார்கள். அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு உணவு வழங்குவதாக அரசு கூறுகிறது.

சிறைக் கூடங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுவது போன்று அந்த மக்களுக்கு உணவு வழங்கப்படுகின்றது. அவர்களும் உண்கிறார்கள், உறங்குகிறார்கள்தான். கிளியைக் கூண்டில் அடைத்து வைத்து நல்ல உணவை வழங்கினாலும் கிளி சந்தோசமாக இருக்குமா?

டாக்டர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்மக்கள் சுய கௌரவத்துடன் வாழும் சூழ்நிலை உருவாக்க வேண் டும். அகதி முகாம் களில் உள்ள மக் கள் உடன் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

இந்த அரசில் மக்கள் துன்பப்படுகிறார்கள். 9 பத்திரிகையாளர்கள் கொலை செய் யப்பட்டுள்ளனர். 'உதயன்' உட்பட பல ஊடக நிறுவனங்கள் பல தடவைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு நிறையவே பிரச்சினைகள் உண்டு. மக்களுக்கு உண்மை தெரிந்தும் மௌனமாக உள்ளனர்.

யாழ். மக்களுக்கு ஜனநாயகத்தை நிலைநாட்டவே ஐ.தே.கட்சி போட்டியிடுகிறது. மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட 7100 பேர்கள் வெளிமாவட்டங்களில் உள்ளனர். தற்போதுள்ள சூழ்நிலைகாரணமாகவே இவர்கள் வெளியில் வசிக்கிறார்கள். ஐ.தே.கட்சிக்கு உங்கள் ஒத்துழைப்புக்களை வழங்குவதன் மூலம் உங்கள் பிரச்சினைகளைத் தீர்வுகாண முன்வரவேண்டும் - என்றார் அவர்.

பத்திரிகைக் கவுன்சிலை (பேரவை) இப்போது மீண்டும் கொண்டுவர அரசு முயல்கிறது. அதனை நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம்இங்குள்ள ஊடகங்களை அச்சுறுத்துவதே அரசின்நோக்கம். ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த அரசு முனைகிறது - என்று அவர் கூறினார். (1-50-9-111)

# குருநாகலில் மினி சூறாவளி 150 வீடுகள் சேதமடைந்தன

கொழும்பு, ஜூலை 17

குருநாகல் - அம்பன்பொல பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஒருமணியளவில் ஏற்பட்ட மினிசூறாவளியினால் 150 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த மினிசூறாவளியின் தாக்கத்தினால் 5 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அம்பன்பொல மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே இந்தச் சூறாவளி ஏற்பட்டுள்ளது என குருநாகல் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஏற்பட்ட மினிசூறாவளியினால் குறித்த பிரதேசத்திலுள்ள பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. அத்துடன் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என குருநாகல் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் டபிள்யு. எம்.எஸ்.டி. வன்னி நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மினிசூறாவளியினால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன எனவும், அதனால் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்தினாலேயே இவ்வாறான கடும் காற்று வீசுகின்றது என்றும் வன்னி நாயக்க மேலும் தெரிவித்தார். (சி)

# முகாமில் உள்ள தாய்மார்களுக்கு டிசெம்பர் வரை போசாக்கு உணவு

## இலங்கை மிசன் பேண்கள் அமைப்பு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் பெண்கள் அமைப்பினால் கைதடி பனை அபிவிருத்தி சபை முகாம் 1,2 மற்றும் விடுதி முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ள அனைத்து பாலூட்டும் தாய்மாருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் போசாக்குஉணவு வழங்கப்பட்டது.

அத்துடன் கைதடியில் உள்ள இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கான பாடசாலையில் கல்வி கற்கும் ஆண்டு 1 மற்றும் ஆண்டு 5 பிள்ளைகளுக்கென அப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளில் ஒரு மாதத்துக்கு தேவையான பால் மா பைக்கற்றும் சீனியும் வழங்கப்பட்டன.

அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை பெண்கள் அமைப்பினர் இப்பணியை குறிப்பிட்ட முகாம்களுக்கும் பாடசாலைகளுக்கும் டிசெம்பர் மாதம் வரை தொடர்ந்து செய்வார்கள் என்ளறும் அறிவித்துள்ளார்கள்.

அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை யாழ். பிராந்திய தலைவருடன் பெண்கள் அமைப்பின் தலைவி, செயலாளர், பொருளாளர் மற்றும் குருமார் நேரில் சென்று இப்பணிகளை மேற்கொண்டார்கள். (1)




## சித்தன்கேணி ஸ்ரீ அருள்மிகு நாககன்னியம்மன் ஆலயம்

மெய்யடியார்களே!

அம்பாளின் பூஜைகளும், வழிபாடுகளும் வழமைபோல் ஆரம்பமாகிவிட்டன. அந்தவகையில் இன்று ஆடி மாத முதல் வெள்ளிக்கிழமை (17.07.2009) ஒரு மணியளவில் அபிஷேக பூசைகளுடன் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதிவலம் வந்து அருள்பாலிப்பாள். அத்தோடு அம்பாளின் அருள்வாக்கும் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஸ்ரீஅருள்மிகு நாககன்னியம்பாள் ஆலயம்
சித்தன்கேணி.

(சி/559598)

இறைதொண்டில் ஞானகுரு
இந்திரன்ஐயா - பூசகர்


# மாவையில் இன்று கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

வரலாற்றுப்பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்று வரும் காம்யோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா இடம் பெறவுள்ளது.

காலை 7.30க்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்று ஒரு மணிக்கு ஷண்முகார்ச்சனை நடைபெறும். தொடர்ந்து கார்த்திகைக் குமரன் வீதி வலம் வந்து அருள்காட்சி அளிப்பார்.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (1)

(சிறப்பு மலர் 9 ஆம் பக்கத்தில்)

# இரண்டாம் தவணைப் பரீட்சைகள்

சுழிபுரம், ஜூலை 17

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடங்கி அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (1-28)

# சோசலிச சமத்துவக் கட்சியின் பகிரங்கக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17

சோசலிச சமத்துவக்கட்சியின் ஏற் பாட்டிலான பகிரங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

'உலகப் பொருளாதார நெருக்கடியும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பும்' என்னும் தலைப்பில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# மரண அறிவித்தல்கள்

## சூசைப்பிள்ளை தோமஸ் (தொம்மை, J.P.)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை தோமஸ் (தொம்மை, J.P.) 15.07.2009 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

இவரது இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அவுபக்கர் வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தர்



நவாலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, அப்பையா லேனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தர் நேற்று (16.07.2009) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும் சிவானந்தன், சிவநேசன் (கனடா), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவதாசன், சிவசக்தி (ஆசிரியர், ஆனைக்கோட்டை R.C.), சிவமலர், சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஷீலா (கனடா), மா.இளம்பிறையன் (யாழ்.பல்கலைக்கழகம்), முருகதாஸ் (கிளனெஸ் எஸ்டேட், அவிசாவளை), ஜெயசுதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும்லெனின் (கனடா), ஒல்கா (கனடா), பிரியங்கா (கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ராகுல் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பானுஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பராசக்தி, காலஞ்சென்ற பசுபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற நாகரட்ணம், வில்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெய்வேந்திரம் - ஜீவா ஆகியோரின் மாமியும் பாலகுமரன், பாலரஞ்சன், பாலமுரளிதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்பு பெரியதாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நாளையும் (18.07.2009 சனிக்கிழமை) மறுநாளும் (19.07.2009 ஞாயிற்றுக்கிழமை)வைக்கப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மா.இளம்பிறையன்
0602159592, 0773405978, 0776078578

43, 6/4, ருத்திர மாவத்த,
வெள்ளவத்தை.

ப.பாலமுகுந்தன்
0773867458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜே.வி.பியின் போக்கில் தென்படும் மாற்றங்கள்

இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பி. தலைவர்களிடமிருந்து வெளிவந்திருக்கும் புதிய கருத்துக்கள், நிலைப்பாடுகள் தமிழர் தரப்பையே ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கும் என்பது நிச்சயம்.

உரிமைகளுக்கான தமிழரின் தேசிய எழுச்சியை இதுவரை காலமும் குறை கூறிவந்த ஜே.வி.பியை, பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்கள் பேரின வாதத்தைக் கிளப்பி, அதில் அரசியல் குளிர்காயும் மூன்றாம் தர அரசியல் பண்பியல்புடைய சக்தி என்றே கருதி வந்தனர்.

ஆனால், இப்போது தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்கள் தமது அரசியல் பேரம் பேசும் வலுவை இழந்து நலிவடைந்திருக்கையில், தமிழர் தரப்பின்பால் உள்ள தார்மீக நியாயங்களை தென்னிலங்கையில் முன்னிறுத்த முயல்வதன் மூலம் அக்கட்சி தன்னை நெறிமுறைப்படுத்திக்கொள்ள எத்தனிக்கின்றது என்பது தெளிவாகின்றது.

''நிமிடத்துக்கு நிமிடம் விஸ்வரூபம் எடுத்துவரும் தமிழரின் பிரச்சினைகள் தொடர்பில் அரசிடம் தெளிவான நோக்கு - பார்வை - இல்லை. இவ்விடயத்தில் அரசின் கண் திறக்கப்படாதவிடத்து பிற்காலத்தில் மிக மோசமான விளைவுகள் ஏற்படும்.'' - என்று எச்சரித்திருக்கின்றார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை அரசு பிற்போடுவது எமது உள்வீட்டுப் பிரச்சினைக்குள் அந்நிய சக்திகளின் தலையீட்டுக்கு வழிவகுக்கும் என அவர் சுட்டிக்காட்டுவதும் நியாயங்கள் நிறைந்த வாதமே.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் அவர்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் மீள வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், அப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது நம் அனைவரினதும் கடமை எனவும் அவர் கூறுவதும் நிச்சயமாக வரவேற்கப்படக் கூடியதே.

ஜே.வி.பியின் தலைவர் இப்படித் தமிழர்களை ஆச்சரியப்படுத்தத்தக்க விதத்தில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கின்றார் என்றால் மறுபுறத்தில், ஜே.வி.பியின் செயலாளரோ இன்னும் கூடுதலாக எட்டடி பாய்ந்து தமிழர்களுக்காக வாதாடுகின்றார்.

''தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அரசு கருதுமானால் முதலில் வடக்கிலே ஏற்படுத்தப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படுவதுடன் அந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கான சூழல் உருவாக்கப்படவும் வேண்டும்.'' - என்று வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா.

யுத்தம் காரணமாக வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் அங்கிருந்த அப்பாவித் தமிழ் மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். அவர்கள் தமது அடிப்படை உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் இழந்திருக்கின்றமை உணரப்பட்டுள்ளது.

தெற்கிலும் கூட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. ஆனால் மக்கள் அங்கிருந்து துரத்தியடிக்கப்படவில்லை. அங்குள்ள மக்கள் இயல்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் வடக்கைப் பொறுத்தவரை அப்படியில்லை. தற்போது அரசு மீட்டுள்ளதாக அறிவித்துள்ள முல்லைத்தீவு கூட அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படவிருக்கின்றது.

- இப்படிச் சுட்டிக்காட்டியுள்ள ஜே.வி.பி. செயலாளர், இது தேவையற்ற நடவடிக்கை எனவும், பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படுவது அவசியம் எனவும் வலியுறுத்தியிருக்கின்றார்.

விசேடமாக, வடக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி, நாட்டின் ஜனநாயகத்தையும், தமிழ் மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்துவது அவசியமானது - அவசரமானது - என அவர் வற்புறுத்துகின்றார்.

நலிவுற்றிருக்கும் இலங்கைத் தமிழ் இனத்துக்காகக் குரல் எழுப்பும் திசையை நோக்கி ஜே.வி.பி. திடீரென நகரத் தொடங்கியிருப்பது துலாம்பரமாக வெளிப்படுகின்றது. ஆனாலும் இதன் பின்னணியில் இருக்கும் சூட்சுமம்தான் - அரசியல் உள்நோக்கம்தான் - உடனடியாகப் புரிந்துகொள்ளத்தக்கதாக இல்லை.

அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக கிராம மட்டத்துக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது குறித்து வலியுறுத்திப் பிரஸ்தாபித்து வந்த ஜே.வி.பி., இப்போது - தமிழர்களின் அரசியல் பேரம் பேசும் வலிமை குன்றியுள்ள சமயத்தில் - தமிழர்கள் நலன் குறித்தும் சிரத்தை காட்டத் தொடங்கியிருப்பது புதிய, ஆச்சரியப்படத்தக்க விடயம் என்பதில் சந்தேகமில்லை.

தென்னிலங்கையில் இத்தகைய பின்னணியில் உருப்பெறும் புதிய கருத்து நிலைப்பாடுகளுக்கு ஒத்திசைவான பிரதிபலிப்புகளைக் காட்டுவதன் மூலம், அத்தரப்புகளைத் தமிழர் பக்கம் திருப்பித் தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை எட்டுவதற்கு அவர்களை எவ்வாறு வசமாகப் பயன்படுத்தலாம் என்பது குறித்துத் தமிழ் தலைவர்கள் சிந்திக்கவேண்டிய காலம் எழுந்துள்ளது.

## யாழ்., முல்லை., கிளிநொச்சி பகுதிகளில் சிறைச்சாலைகளை விஸ்தரிக்க ஏற்பாடு

### சிறைச்சாலை ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 16

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். கோட்டைப் பகுதிகளில் சிறைச்சாலைகள் விஸ்தரிக்கப்படவுள்ளன என சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு :-

சிறைச்சாலைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் தவறான கருத்துக்களை நீக்க சிறைச்சாலை அதிகாரிகளையும் சோதனை செய்யும் விசேட நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு சிறைச்சாலைகளும் காரணமாகவுள்ளன என்ற கருத்துக்கள் பரவலாக நிலவி வருகின்றன. அதனைத் தடுப்பதற்கு சில விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி இராணுவத்தினரும் பொலிஸாரும் சிறைச்சாலை நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்த நடவடிக்கைகளுக்கு ஏற்ப நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மீள அழைத்துவரப்படும் கைதிகள் இராணுவத்தினர் மூலம் சோதனை இடப்படுவர். கைதிகளைப் பார்க்க வருகின்றவர்கள் பொலிஸாரினால் சோதனை செய்யப்படுவர். அதேபோன்று கடமைக்கு வரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இத்திட்டத்தின் கீழ் சோதனைக்கு உட்படுத்தப்படுவர். அவர்களுக்கான சோதனை சிரேஷ்ட அதிகாரிகள் முன்னிலையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும்.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் உள்ள சிறைக்கைதிகளில் ஆயிரத்து 506 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 10 ஆயிரம் பேரை சிறைவைக்கக் கூடிய வசதிகள் இருந்தபோதும் தற்போது 31 ஆயிரத்து 653 பேர் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் இட நெருக்கடி ஏற்படுவதால் புதிய கட்டடங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகில் இரண்டரை ஏக்கர் காணி கிடைத்துள்ளது. அத்துடன் யாழ். சிறைச்சாலை விஸ்தரிக்கப்படவுள்ளது.

கண்டி பல்லேகலையில் புதிய சிறைச்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. களுத்துறையில் குழந்தைகளுடனான பெண்களுக்கென வேறு சிறைச்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேலும் வாரியப்பொலையில் ஒன்று புதிதாக அமைக்கவும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் முன்னர் இருந்த சிறைச்சாலைகளைப் புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தற்போது சிறைவைக்கப்பட்டுள்ள 31 ஆயிரத்து 653 கைதிகளில் 37.5 வீதமானவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என்றும் சுமார் 15 ஆயிரம் பேர் விளக்கமறியல் கைதிகள் - என்றார். (சி)

## இடம்பெயர்ந்த மக்களின் நலன்களுக்காக பிரிட்டிஷ் அரசு 5 மில்லியன் டொலர் நிதியுதவி

### மக்களை விரைவில் மீளக் குடியமர்த்துமாறும் வலியுறுத்து

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையிலான மோதல்களில் இடம் பெயர்ந்த பொது மக்களுக்கான உதவித்திட்டங்களுக்காக சுமார் 5 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதுடன், அவர்களை விரைவில் மீளக்குடியேற்றுமாறும் பிரித்தானிய அரசாங்கம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

இரண்டு இலட்சத்து எண்பதினாயிரத்துக்கும் அதிகமான இடம் பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்புவதற்கு உதவ இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று பிரிட்டனின் சர்வதேச வளர்ச்சிக்கான துறை கூறுகிறது.

முகாம்களின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் அடிப்படைத் தேவைகள் இன்னமும் போதாமலேயே உள்ளன. மனிதாபிமான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. யுத்தம் நிறுத்தப்பட்டாலும் மோதலினால் இடம்பெயர்ந்த மக்கள் தற்போதும் அபாயகரமான நிலைமையிலேயே உள்ளனர்.

180 நாள்களுக்கு இடையில் மக்களை மீளக் குடியேற்றுவதாக இலங்கை அரசு உறுதியளித் திருக்கின்றது. இந்த உறுதிமொழியை இலங்கை அரசு கடைப்பிடிக்க வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். மனிதாபிமான நிறுவனங்கள் இயங்குவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என பரித்தானிய அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

அவசர தங்குமிடங்கள், அடிப்படை சேவைகள், கட்டமைப்பு பிரச்சினைகள், போக்குவரத்து ஆகியவற்றை வழங்க இந்த நிதி உதவும் என்றும் அது கூறுகிறது.

விதைகளையும், உபகரணங்களையும் வாங்குவதற்காகவும் அந்தப் பணம் வழங்கப்படும் என்றும் பிரிட்டனின் சர்வதேச வளர்ச்சிக்கான துறை தெரிவித்துள்ளது. (50)

## பட்டப்பகலில் பெண்ணின் நகை அபகரிப்பு; மல்லாகத்தில் நடந்த துணிகரத் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கிராம அலுவலரின் அலுவலகத்தின் முன்னால் பட்டப்பகல் வேளையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி சங்கிலி என்பன அறுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இத்துணிகரமான திருட்டு நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் மல்லாகம் கோட்டைக்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருமதி ரஜனி ரவிச்சந்திரன் என்ற பெண்மணியே இவ்வாறு நகைகளைப் பறிகொடுத்தவராவர்.

கந்தரோடையில் இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கணவருக்கு காலையில் உணவை எடுத்துக் கொண்டு பஸ் ஏறுவதற்காக மல்லாகம் வந்து கொண்டிருந்த வேளையிலேயே குறித்த பெண்மணியின் நகைகளை சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மிகவும் துணிகரமாகத் திருடிக்கொண்டு தப்பியுள்ளார்கள்.

திருட்டுச் சம்பவம் நடைபெற்ற இடம் சனநடமாட்டமிக்க இடமாக இருந்த போதிலும், பெண் கூக்குரலிட்டும் திருடர்கள் தப்பியோடியமை குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இத்திருட்டுச் சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. (04-86)

## நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு 500 இந்தியப் படையினர் இலங்கை வருவர்

### பாதுகாப்புத் தலைமை அதிகாரி சரத்பொன்சேகா

கொழும்பு, ஜூலை17

படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு 500 இந்தியப் படையினர் இலங்கை வரவிருப்பதாக முப் படைத் தளபதியாக புதிதாக நியமனம் பெற்றுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

புதிய பிரதான பாதுகாப்பு அதிகாரியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு இராணுவத் தலைமையகத்திலுள்ள கூட்டுப் படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

உலகில் எந்தவொரு நாட்டு இராணுவத்துக்கும் இல்லாத அனுபவம், திறமை எமக்கு உண்டு. நாட்டில் சமாதானம் உருவாக்கப்பட்ட போதிலும் பாதுகாப்பைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இராணுவம் அவசியமாகும். இது புத்திசாதுரியமாகும். ஆயுதம் மற்றும் ஆளணி என்ற வகையில் முப்படையினருக்கு எல்லாவித திறமையும் உண்டு. அதனால், அந்தத் திறனை மென் மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சிகள், ஆயுதங்கள் போன்றன முப்படை, பொலிஸார் பொலிஸ் அதிரடிப் படையினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முப்படையினர் தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள், அபிவிருத்திப் பணிகள் போன்றவற்றில் நாம் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்ந்தும் மென்மேலும் அதிகரிக்கப்படும்.

வடக்கின் வசந்தத்தின் போது பாதைகள், பாலம், நீர்நிலைகள், ரயில் பாதைகள் போன்றவற்றைச் சீரமைக்கும் பணிகள் உட்பட விவசாயம், மின்சாரம், தகவல் தொடர்புகளை ஏற்படுத்துதல், இடம்பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்பு, அம்மக்களின் அடிப்படைத் தேவைகள் போன்றவற்றின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் முப்படைத் தளபதி கூறினார். (50)

### நாளை

| | |
|---|---|
| ஆடி 02 | 18.07.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.இ. 06.25 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.ப. 11.55 வரை |
| சுபநேரம்: | 03.00 - 04.30 |
| ராகுகாலம்: | 09.00 - 10.30 |

## கிறிஸ்தவ பாடத்துக்கான மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.மரியன்னை பேராலய இளைஞர் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கிறிஸ்தவ பாடநெறிக்கான மீட்டல் வகுப்பு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் குடும்ப நல உத்தியோகத்தர் பதவிக்கு திருகோணமலை சுகாதார அமைச்சுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் நேற்றுமுன்தினம் முடிவடைந்திருந்தன.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு தனித்தனியே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

தேவதயாளன் லசியா - கச்சாய் றோட், கொடிகாமம், ஜெயந் திரன் மிதுரா - ஆவரங்கால், புத்தூர், திரவி யம் நிமலராஜி - சங்கானை, சுந்தரலிங்கம் புஸ்பலதா - பண்ணாகம் தெற்கு, சுழிபுரம், செல்லத்துரை ரஜிமலா - துர்க்காபுரம், தெல்லிப்பழை, பாலசுப்பிரமணியம் நீதா - புத்தூர் வடக்கு, சரவணபவன் றேனுகா - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, கோபாலபிள்ளை றேனுகா - வலந்தலை, காரைநகர், திருஞானசுந்தர் சன்யா - பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை, எமிலியாம்பிள்ளை சரண்யா - குரும்பசிட்டி, தெல்லிப்பழை, சிவசுப்பிரமணியம் சரோஜா - கட்டுடை, மானிப்பாய், கருணாகரன் சரூஜா - ஆவரங்கால், சிவராசா சாமினி - உயரப்புலம், ஆனைக்கோட்டை, கனகரத்தினம் சண்முகப்பிரியா - புத்தூர் கிழக்கு, சிவலிங்கம் சர்மிளா - மூளாய் மேற்கு, பாக்கியநாதன் அகல்யா - கைதடி தெற்கு, பேரின்பராசா அனற் கவோனி - இளவாலை, ஆனந்தராஜா டக் சிகா - சூராவத்தை, சுன்னாகம், ஜெயசந் திரன் டிஷாந்தினி - அளவெட்டி வடக்கு, செல்வராஜா கௌரி - அல்வாய் மேற்கு, குணரட்ணம் குணரூபா - மட்டுவில், சிறீ கந்தமோகன் ஜனனி - மல்லாகம், சிவராசா ஜனனி - வேலணை மேற்கு, சதாசிவம் ஜனந்தினி - பெரிய அரசடி, சாவகச்சேரி, ஸ்ரீபன் ஜெரின் - பாசையூர், இராதகிருஸ்ணன் ஜெயமதி - சங்கத்தானை, சாவகச்சேரி, வசந்தராசா கஜேந்தினி - தொல்புரம் மத்தி, சுழிபுரம், நாகரத்தினம் கலைச் செல்வி - சிவன்கோயிலடி, காரைநகர், இரவீந்திரன் கனிதா - இல.27, அரசடி, நல்லூர், சுதர்ராஜா கார்த்திகா - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, சர்வேந்தின் காருண்யா - மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, இராஜசிங்கம் குகப்பிரியா - வட்டு.கிழக்கு, ஹரிச்சந்திரன் சோபனா - ஏழாலை கிழக்கு, ஏழாலை, இராசநாயகம் சோபிகா - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை, சரோஜராஜா சோபிதா - ஐயனார் கோயிலடி, மல்லாகம், சின்னத்தம்பி சிந்துஷா - நாவற்காடு, வரணி, சிவானந்தன் சிவநந்தினி - சங்குவேலி, மானிப்பாய், சிவபாதசுந்தரம் சிவராணி - அராலி மேற்கு, அருணகிரிநாதன் சிவசக்தி - டச்சு றோட், மூளாய், கதிரவேலு சௌகல்யா - வசந்தபுரம், இளவாலை, நல்லையா சிறிநாயகி - சண்டிலிப்பாய் வடக்கு, தட்சணாமூர்த்தி சுகீதா - குருவீதி, காங்கேசன்துறை, தவகுலசிங்கம் சுபாஜினி - ஏழாலை மத்தி, வேலும்மயிலும் சுதா - சங்கானை கிழக்கு, குணரட்ணம் சுதாஜினி - கொக்குவில் கிழக்கு, சிவராஜா தனுஜா - சங்கானை வடக்கு, இராமச்சந்திரன் தர்சினி - 74/1, புங்கங்குளம், கொழும்புத்துறை, துஷ்யந்தி தங்கராசா - அராலி தெற்கு, இராமசாமி வெள்ளி நாயகி - கோண்டாவில் கிழக்கு, முருகையா கார்த்திகா - கோப்பாய் மத்தி, நடராஜா ஜனார்த்தனி - ஊரெழு கிழக்கு, தர்மரட்ணம் தர்சினி - 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு. (1)

## முதுகலைமாணி ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி பிராந்திய திட்டமிடல் மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கன் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்திய[illegible] கலந்து கொள்வர். (1-203)


## The Peninsula Motel 10A, Cathedral Street, Jaffna

யாழ்.நகரில் அனைத்து வசதிகளுடனும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள The Peninsula Motel இல் உங்கள் வசதிக்கேற்ப தங்குமிட அறைகளைப் பதிவு செய்துகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- 021 222 5796 / 077 4083656

நேரிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

The Peninsula Motel.



## கூறுவிலை

எமது சங்கத்தின் அலுவலகக் கட்டடத்திற்கு வர்ணம் பூசுவதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலைதாரர்கள் மேற்படி கட்டடத்தைப் பார்வையிட்டு தேவையான பெயின்ற் வகைகளின் பட்டியலை சமர்ப்பிப்பதுடன் எதிர்பார்க்கும் கூலித் தொகையையும் குறிப்பிட்டு 25.07.2009ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைத்தல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/559595)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச்செவ்வாயை முன்னிட்டு

## கடைகள் ஏலம் போடுதல்

காலம்: நாளை (18.07.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

இடம்: தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க முன்றிலில்

குறிப்பு: கடைகள் ஏலத்தில் எடுப்பவர்கள் முழுத்தொகையினையும் ஏலம் நடைபெறும் திகதியிலேயே செலுத்தவேண்டும். அத்துடன் ஆடிச்செவ்வாய் நான்கு நாள்களுக்கும் சேர்த்து மட்டுமே வழங்கப்படும்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம். இணைச்செயலாளர். (87084)


## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

எமது கல்லூரி அதிபர் திருமதி சிவத்திரை சிவநாதன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி பூமணி பிள்ளையினான்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார ஊழியர்கள்.
சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (சி/559599)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராஜகுமார் சிவமாலா அவர்களின் அன்புத் தயார்

### நேசமலர் இராமநாதன்

16.07.2009 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மயிலிணி சைவ ம.வி.
சுன்னாகம். பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு.N.இராஜரட்ணம் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னப்பு நாகமணி

அவர்கள் (16.07.2009) அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## தேவை

தாதி/தாதிபயிலுநர் (ஆண்/பெண்)
வரவேற்பாளர்கள்- பெண்கள் மட்டும்
மருத்துவமாது- பெண்கள் மட்டும்
காது கேட்கும் கருவி பொருத்துநருக்கான பயிலுநர் (பெண்கள் மட்டும், இவர்களுக்கான பயிற்சி கொழும்பிலும், இந்தியாவிலும் அளிக்கப்படும். பயிற்சிகளுக்கான அனைத்து செலவுகளும் எம்மால் வழங்கப்படும்).
★ தாதி/ மருத்துவமாது இவர்களுக்கு அதி உச்ச வேதனம் வழங்கப்படும்.
காலம்: 19.07.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
யாழ்.வைத்தியசாலை,
315, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
தொ.பே.: 021 222 3533, 021 222 1011 (சி/559600)


## கண்ணீர்ப் பூக்கள்



எமது வகுப்பாசிரியை திருமதி சுகந்தி சிறிகரனின் அன்பு மகள்

### சங்கவி சிறிகரன்

அவர்களின் திடீர் மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி. (87088) 2009 விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்

## மரண அறிவித்தல்

### பாவிலுப்பிள்ளை பிலுப்பையா



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை பிலுப்பையா நேற்று (16.07.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் விக்ரோறியாவின் அன்புக் கணவரும் அந்தோனிப்பிள்ளையின் சகோதரரும் (திருகோணமலை) அமரர் றீற்றா புஸ்பராணி மற்றும் சகாயராசா (கனடா), அன் ரனி லூட்ஸ்மேரி, அமரர் சிறிராசன், லெமிஎம்லூயிஸ் (கனடா), அன்ரோனியாடெய்சி, மேரிஜெசிந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யேசுதாசன், மேரிஜெசிந்தா சேவியர் வில்பிரட், மேரி ஜெனிற்றா, அமரர் மரியறூபநாயகம் மற்றும் பீற்றர் ரெட்ணம் ஆகியோரின் மாமனாரும் வரதராஜன் - அனிற்றாயூலியற் (ஜேர்மனி), அன்ரன்யூபேட் - டனுஷியா (அமெரிக்கா), கனிஸ்ராயூடிற், கல்வின், எர்வின், ஜெயறூபன், ஜெஸ்மின்கார்மேலா, ஜெனற்காமலிற்றா, ஜெனுஷன், டிலைக்ஷி, மெற்றில்டா, டிலைக் ஷனா, தருசனா, றொபின்ஷன், றெனிஸ்ரா, றெஜி, ரிவ்வனி, ரானியா ஆகியோரின் பாசமிகு பேரனும் டில்சான், டிலக்ஷியா, றம்மி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (18.07.2009) சனிக்கிழமை சில்லாலை புனித கதிரை அன்னை ஆலயத்தில் பி.ப. 2.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் அல்லைப் பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலய சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லாயன் வீதி, சில்லாலை. தகவல்: மனைவி.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு நாகமணி



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு நாகமணி நேற்று (16.07.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னாத்தை தம்பதியினரின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆச்சிக்குட்டி, விசாலாட்சி, சின்னம்மா, பரமாணி மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவபாலன், துரைரட்ணம், சந்திரா, இராசரத்தினம், தங்கராசா, ஜெயந்தி, லதா, டல்சி ஆகியோரின் தகப்பனாரும் செல்வராசா, சயனொளி, சோதிலிங்கம், இராசேந்திரம், நிர்மலா, ராணி, உஷா, சறோ ஆகியோரின் மாமனாரும் ஒமைரா, சுயாந்தினி - பரமேஸ்வரன், மதன், சுதாகர், தயேந்தினி, சாளினி, கபில்ராஜ், தனுசன், கவிதா - குமார், சுபீதா - ஸ்ரீபிரபாகரன், சுபீதர், ஸோபிதர், பிரதீஸ், தரணிகா, சுதர்சினி - கண்ணன், சுஜீவன் - ஜசோதா, சுனித்தா - கரன், சுரேகா, சஜீவன், ததீஸன், பிர வின்சன், புவீன்சன், சரணியன், மயூரன், கரேஸ், நிறேஸ், யுவிதா, சோபிதா ஆகியோரின் பேரனும் நிவேஸ், வர்சியன், அக்சயன், ஏஞ்சல், ஷர்னி, தாரிக்கா, மகிஷா, பிருந்திகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி, [illegible] தெற்கு, மானிப்பாய். தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ-9 பாதை ஊடகப் பொருள்கள் எடுத்து வரப்படுவதைத் தொடர்ந்து தென்னிலங்கைப் பழவகைள் யாழ்ப்பாண நகர வீதிகளில் அதிகளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அன்னாசி, றம்புட்டான், மங்குஸ்தான் போன்ற பழவகைகளுடன் அப்பிள், தோடம்பழம் போன்றனவும் விற்பனைக்கு வைக்கப் பட்டிருப்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள்:நேசன்)*

## தும்புத் தொழிற்சாலைக்கு நிதி ஒதுக்கீடு

வேலணை,ஜூலை17

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரம் துறையூர்ப் பகுதியில் தும்பு பதனிட்டு கயிறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் கயிறு உற்பத்தி செய்யும் மின்சார இயந்திரம் வாங்குவதற்கும், இத் தேவைகளை நிறைவு செய்வதற்குமாக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக் கடிதம் பிரதேச செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(201-167)

## வவுனியா, அனுராதபுரத்திலிருந்து மாட்டெரு எடுத்துவர ஏற்பாடு

சண்டிலிப்பாய், ஜூன்17

குடாநாட்டில் மாட்டெருவிற்கு (இயற்கைப் பசளை) ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் விலை அதிகரிப்பபையும் நிவர்த்தி செய்யும் நோக்குடனும் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகவும் வவுனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து லொறிகள் மூலம் மாட்டெரு எடுத்துவரப்படவிருக்கின்றது.




இதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசம், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியுடன் மேற்கொண்டுள்ளது. மாட்டெரு தேவையான விவசாயிகள் சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் விவசாயத்துக்குத் தேவையான இயற்கைப் பசளையான மாட்டெரு வன்னிப் பகுதி, வவுனியா, அநுராதபுரம் போன்ற பகுதிகளிலிருந்து லொறிகள் மூலம் முன்னர் எடுத்து வரப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பல வருடங்களாக வன்னியிலிருந்து மாட்டெரு எடுத்துவரப்படுவது தடைப்பட்டிருந்தது. இதனால் விவசாயிகள் செயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி வந்தனர். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் கொடிய நோய்கள் மக்களுக்கு ஏற்படுவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது நாட்டில் போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஏ-9 தரைப் பாதை ஊடாக வாகனப்போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து விவசாயிகளின் நன்மை கருதியும் விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடனும் இயற்கைப் பசளையை அதிகளவு பயன்படுத்துவதற்காகவும் வவுனியா, அநுராதபுரம் போன்ற இடங்களிலிருந்து கடந்த காலங்களில் இடம்பெற்றது போல் லொறிகள் மூலம் மாட்டெருவை எடுத்து வருவதற்கான தீவிர முயற்சியில் மேற்படி சமாசம் ஈடுபட்டுள்ளது.

மாட்டெரு தேவையான விவசாயிகள் தேசவள விவசாயிகளின் சம்மேளனங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் க.முதலியார் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

(1-115)

## ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு வலய ரீதியாகப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.குடாநாட்டு கல்வி வலயங்களில் உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவக கல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் நூறுவீத தேவைப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

ஏனைய நான்கு கல்வி வலயங்களிலும் 236 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.

வடமராட்சி கல்வி வலயம் 82, யாழ்ப்பாணம் கல்வி வலயம் 80, வலிகாமம் கல்வி வலயம் 52, தென்மராட்சி கல்வி வலயம் 22 ஆகிய வீதத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் தேவைகளுடன் இயங்கி வருகின்றன.

ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்ற பலர் வெளிவாரியாகக் கற்று கலைப்பட்டதாரிகளாக நியமனத்தை மாற்றிக் கொண்டுள்ளமையும் இந்தப் பற்றாக்குறைக்கான காரணம் என கல்வித் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். (203-68)

## தேர்தலில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தருக்கு அடுத்தவாரம் ஆலோசனைக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

அடுத்தமாதம் நடைபெறவுள்ள மாநகர சபைத் தேர்தலில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான ஆலோசதனைக் கருத்தரங்குகள் அடுத்தவாரம் நடத்தப் படவுள்ளதாக யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ள கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு கருத்தரங்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 23ஆம் திகதியும், மறுநாள் 24 ஆம் திகதி சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களுக்கும் நடைபெறவுள்ளன.

இதேவேளை - தேர்தல் தினத்தன்று கடமையாற்றவுள்ள எழுதுவினைஞர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ள உத்தியோகத்தர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

## தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதை உறுதிப்படுத்த வகை செய்யவேண்டும்

### கலாநிதி ரவிராஜன் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை17

''தொழில்நுட்பத்தின் உதவியுடன் வறுமையை விரட்டுவேன்'' என இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் பிரபல விஞ்ஞானியுமான அப்துல்கலாம் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியமையை இங்கு நினைவு கூரல் பொருத் தப்பாடுடையதாகும். தொழில்நுட்பத்தின் திறன்களை அறிமுகம் செய்யவும், அவற்றை விருத்தி செய்யவும் தவறும் சமுதாயங்கள் முன்னேற்றங்களைக் காண்பது என்பது அரிதானதாகும்.



யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்ப நிறுவனம் (வட்டுக்கோட்டை), விவசாய நிறுவனம் (மருதனார்மடம்) ஆகியவற்றின் 23ஆவது ஆண்டு நிறைவு தினமும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை ஆனி மாதம், நான்காம் திகதி மருதனார்மடம் விவசாய நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் சிரேஷ்ட விரிவுரையாளரும் இளவிஞ்ஞானியுமான கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழகங்கள் அல்லது தொழில் நுட்ப நிறுவனங்களின் கற்கை நெறிகளை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களது கல்வியறிவை மேம்படுத்துவதை மட்டுமன்றி அவர்கள் எளிதில் வேலை வாய்ப்புக்கள் பெறக்கூடியமையை உறுதிப்படுத்துவதையும் தமது முக்கிய கடமையாகக் கொள்ளவேண்டும். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தளவில் வரையறுக்கப்பட்ட சில நூற்றுக்கணக்கான மாணவர்களையே தொழில்நுட்பக் கல்விக்கு உள்வாங்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே தொழில் நுட்பக்கல் வியைப் பரவலாக்கும் பாரிய பொறுப்பு தொழில்நுட்ப நிறுவனங்களையே மிகப் பெருமளவு சாருகின்றது. நிவர்த்தி செய்யச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கையடக்கத் தொலைபேசி, கணனி, சலவை இயந்திரம் போன்றவை எமது அன்றாட வாழ்வில் இடம்பெற்றுள்ள நிலையில் வாண்மைத் தேர்ச்சி பெற்ற அணியினரின் தேவையும் அதிகரித்துள்ளமை கண்கூடானது. இந்நிலையில் இவ்வாளணியினர் அவ்வத்துறைகளில் கைத் தொழில் பயிற்சிகளினூடாக வாண்மைத் தேர்ச்சியைப் பெறுவது பயனுடையதாகும். இத்தகைய பண்புகளுடன் கூடிய தொழில் நுட்பவியலாளர்களே நவீன தொழில் நுட்ப யுகத்தில் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வர். எனவே இத்தகைய தொழில் பயிற்சியையும் உள்ளடக்கும் வகையில் பாடவிதான மறுசீரமைப்பைப் பற்றி கருத்திற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இத்தகைய டிப்ளோமா நெறியைப் பயிலும் மாணவர்கள் தொழில் பயிற்சிகளைப் பெற்றிருப்பதை சான்றிதழ்கள் பெறுவதற் குரிய ஒரு நிபந்தனையாக வைத்திருக்க முடியும். மாணவர்களை யாழ்.குடாநாட்டுக்கு வெளியே அனுப்பி கைத்தொழில் பயிற்சிகளை வழங்குவது இனிவரும் காலங்களில் சாத்தியப்படலாம். வெளி நாடுகளிலுள்ள துறைசார் வல்லுநர்களின் ஆலோசனையுடன் பாடவிதான மறுசீரமைப்பைச் செய்து சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து முதல்தர பயிற்சிநெறிகளை எதிர்காலத்தில் வழங்க முயற்சிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருளுவார். (204)

* * *

சுழிபுரம், ஜூலை 17

இன்று வெள்ளிக்கிழமை ஆடிப்பிறப்புத் தினமாகும். இதனையொட்டி ஆலயங்களில் விசேட பூசைகளும், பொங்கல் நிகழ்வுகளும் நடைபெறும். (204-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஏழாலை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும். (204-207)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 250 மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.மாவட்டத்தில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினரால் வடக்கின் வசந்தம் திட்டத்திக் கீழ் இருநூற்றைம்பது மாணவர்களுக்கு விசேட தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கணனி மென்பொருள், கணனி வன்பொருள், மரப் பொறியியல், முக, உடல், சிகை அலங்காரப் பயிற்சி, விவசாய உபகரணம் திருத்துதல், இலத்திரனியல் உபகரணம் திருத்துதல், உந்துருளி திருத்துதல், ஆடை வடிவமைத்தல் போன்ற கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளில் இணைய விரும்புவோர் 'இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, 103/01, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு உடனடியாக சுயவிவரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இ.அகிலன் அறிவித்துள்ளார். (204)

## அடையாள அட்டை வழங்க நடமாடும் சேவை

வேலணை,ஜூலை17

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கான நடமாடும் சேவை நல்லூர் திவ்விய ஜீவண சங்க மண்டபத்திலும் யாழ்.பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை சேவை இடம்பெறவுள்ளது. (203-167)

## தப்பியோடிய மனநோயாளி விழிப்புக்குழுவால் பிடிக்கப்பட்டார்

வலி.வடக்கு, ஜூலை 17

இரவுநேரம் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த அளவெட்டி விழிப்புக் குழுவினரிடம் அகப்பட்ட மனநோயாளி மீண்டும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டிப் பகுதியில் இரவு ஊரடங்கு வேளை கடமையில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவினர் மிகவும் விரைவாக வீதியால் வந்த நபரை மறித்து விசாரித்துள்ளார்கள். அவருடைய கதையில் சந்தேகம் கொண்ட விழிப்புக் குழுவினர் தெல்லிப்பழை வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டபோது அவர் முதல் நாள் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய நோயாளி என்பது தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நள்ளிரவு குறிப்பிட்ட இடத்துக்கு அம்புலன்சில் சென்ற வைத்தியசாலை ஊழியர்கள் குறிப்பிட்ட நோயாளியை அழைத்து வந்து மீண்டும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்கள். (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேஸில் அதிபருக்கு யுனெஸ்கோ சமாதானப் பரிசு வழங்கப்பட்டது

பாரிஸ், ஜூலை 17

பிரேஸில் நாட்டு அதிபருக்கு யுனெஸ்கோ வினால் சமாதானப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பீலிக்ஸ் ஹவுபவுன்ற்-பொயிக்னி சமாதானப் பரிசு பிரேஸில் அதிபர் லுயிஸ் இனாஸியோ லுலுடா சில்வாவுக்கு ஐ.நா.கல்வி, விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டது.

பரிசினைப் பெற்றுக்கொண்டு பிரஸில் அதிபர் பேசுகையில், ஆயுத மோதல்கள் மனித பகுத்தறிவைப் பகிரங்கமாகக் கேவலப்படுத்தும் நிகழ்வுகளாகும் என்று குறிப்பிட்டார்.

ஆக்கிரமிப்பை தற்காப்பு நடவடிக்கை என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாகரிகங்களுக்கிடையில் வேறுபாடுகளை ஒழிப்பதற்கான வழியாகவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று லூலுடா சில்வா கூறினார்.

பரிசு வழங்கப்பட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்ட அவர் அமைதிக்காகத் தமது உயிர்களைக் கொடுத்துள்ள ஆண், பெண் அனைவர்களுடனும் இந்தப் பரிசைப் பகிர்ந்து கொள்வதாகக் குறிப்பிட்டார்.

முழுமையான லத்தீன் அமெரிக்கா ஜனநாயகத்தின்/புதிய உத்வேக வாழ்வினை இன்று அனுபவிக்கின்றது. இதற்கு மேலும் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது என்றார். இனிமேலும் பின்னோக்கி நாம் போக முடியாது. அதனால் தான் ஹொன்ரோவில் ஏற்பட்டுள்ள இராணுவப் புரட்சியை நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம் என்று அவர் மேலும் சொன்னார்.

யுனெஸ்கோ செயலாளர் நாயகம் கொயிச்சிரோ மாட்சுரா, செனிகள் அதிபர் அப்துலாயி, வாடே, போர்த்துக்கல் பிரதமர் ஜோஸ் கோக்ரடீஸ் முதலானவர்களும் பரிசளிப்பின் போது வருகை தந்திருந்தார்கள்.

(ப)

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடமராட்சி, வலயப் பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழத்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**எழுத்து - பிரிவு 1**

தவநிலவின்தாசன் துளசிராம் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), நிதுஷா சிவ சிதம்பரம் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), கிஷாணி ஸ்ரீசிதம்பரலிங்கம் (அல்வாய் சின்னத்தம்பி வித்தி.), வி.சுபாங்கி (துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை)

**கட்டுரை - பிரிவு 2**

பிரியங்கா பிரபாகரன் (பொலிகண்டி இ.த.க.பாடசாலை), சிந்துஷா சின்னத்துரை (கரணவாய் ம.வித்தி), சங்கவி செல்வரத்தினம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),

**கட்டுரை - பிரிவு3**

கீர்த்தனா செல்வரத்தினம் (இமையாணன் அ.த.க.பாடசாலை), தயான்தி குலராஜசிங்கம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ம.சுஜீபா (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி.).

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் - பிரிவு-4**

குலாங்கனா தெய்வேந்திரராஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கனகரட்ணம் நிரோஜன் (நெல்லியடி ம.ம.வித்தி.), அழகேஸ்வரன் ராஜ்கரன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் - பிரிவு - 5**

செல்வப்பிரியா சுந்தரலிங்கம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தனுஷியா தங்கராசா (புற்றளை ம.வித்தி), றஜிந்தா ஆறுமுகம் (விக்னேஸ்வராக் கல்லூரி).

**இலக்கணப் போட்டி -பிரிவு - 4**

தர்சிகா செல்வராஜா (வட.இந்து மகளிர் கல்லூரி), சுபாங்கனி நாகராசா (வட. மத்திய மகளிர் கல்லூரி), தரணியா சின்னராசா (வல்வெட்டி இ.த.க.பாடசாலை).

**இலக்கணப் போட்டி - பிரிவு - 5**

ஹம்சாயினி கிருஷ்ணகோபால் (வட. இந்து மகளிர் கல்லூரி), இந்துமதி விவேகானந்தம் (ஞானாசாரியார் கல்லூரி), தர்சிகா ஸ்ரீதரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), ஜெயக்குமார் கிருஷாந் (ஹாட்லிக் கல்லூரி).'

**திறனாய்வு - பிரிவு - 5**

கௌசிகா மதியழகன் (விக்னேஸ்வராக் கல்லூரி), பிரியங்கா அணந்தீஸ்வரன் (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), அனுஷா கணேசராசா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம் - பிரிவு - 4**

ஜெயபாரதி சரத்சந்திரபோஸ் (வல்வை. மகளிர் ம.வி.), கௌதமி கதிர்வேலு (விக்னேஸ்வராக் கல்லூரி), கிருஷாளினி மகான் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**குறுநாடக ஆக்கம் - பிரிவு - 5**

இராசலிங்கம் சுசில்ராஜ் (வேலாயுதம் ம.வித்தி), சாரங்கி செல்வராசா (விக்னேஸ் வராக் கல்லூரி), கஸ்தூரி அருமைத்துரை (வல்வை. மகளிர் ம.வி.)

*(வளரும்)*


**வேப்பமரங்கள் விற்பனைக்கு**

6அடி, 7அடி சுற்றளவு உள்ள வேப்பமரங்கள் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு 63, இராணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (87081)

SATS-TECH ENGINEERS (PVT) LTD

0114562929, 0212228812, 0212225908




1 Year Subcription free with All Tamil + All sports Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

**அம்மா பகவான் சரணம்**

ஷென்மென் அக்கு பஞ்சர் வைத்தியசாலை புதுப் பொலிவுடன் "SUVASAKA MEDICALS" ஆக மீண்டும் யாழ்.மண்ணில் புதிய மருத்துவ உத்திகளுடன் இன்று (17.07.2009)இல் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகிறது.

உங்களின் சகலவிதமான நோய்களுக்கும் நிவாரணம் அளிக்கப்படும் ஒரே வைத்திய நிறுவனம்

''சுகமாக வாழ்ந்திட எம்மை நாடுங்கள்''

தொடர்பு : (ACCU) Dr.R.Sankar

M.D, Ph.D (Honours) F.R.C.P

இலக்கம்: 295, பலாலி வீதி, ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.

(சாரங்கா பூஞ்சோலைக்கு அருகில்)

(87055)


## சிறுவர் நாடகப் போட்டி முடிவு

சுழிபுரம், ஜூலை 17

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் வட்டு. இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# செய்திச்சரம்... செய்திச்சரம்...

## மாதாந்த உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்

நவாலி, ஜூலை 17

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், காசநோய்க்கான உதவிப் பணம் மற்றும் காசநோயாளர்களுக்கான உதவிப்பணம் பெறுபவர்களது ஜூலை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று உடன் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் ப. அருந்தவராசா கேட்டுள்ளார்.

(201-100)

## மாற்று வலுவுடையோருக்கு மீளழிப்புக் கடன்

வண்ணை, ஜூலை 17

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாற்று வலுவுடைய 88 பயனாளிகளுக்கு 50 வீதம் மீளழிப்புக் கடனை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சுயதொழில் முயற்சிக்காக மேற்படி 88 பயனாளிகளுக்கும் 3 லட்சத்து 39 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

50வீதம் மட்டுமே மீளழிப்புச் செய்ய வேண்டிய வகையில் மாற்று வலுவுடையோருக்கு வழங்கப்பட்டிருக்கும் தொகையைக் கொண்டு சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபட அவர்களுக்கு நிறுவனம் வழிவகுத்துள்ளது.

(201-160)

## கரித்தாஸ் - கியூடேக் நிறுவனம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குக் கடனுதவி

வண்ணை, ஜூலை 17

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் உடுப்பிட்டி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு கடனுதவிகளை வழங்கியுள்ளது.

சுனாமி வாழ்வாதாரத் திட்டதின் கீழ் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அச்சங்க உறுப்பினர்களுக்கு 12 லட்சம் ரூபாவைப் பகிர்ந்து அளித்துள்ளது.

இதனால் 41 பயனாளிகள் வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(201-160)

## புனரமைக்கப்பட்ட பொதுக்கிணறு மக்களுக்குப் பயன்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

நவாலி வடக்கில் பொதுக்கிணறு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதும் கடந்த 3 மாதங்களாக மக்களுக்குப் பயன் இன்றி உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அகதிகள் புனர்வாழ்வுக்கழக நிதிஒதுக்கீட்டில் நவாலி வடக்கில் உள்ள தலுவில் வயல் பொதுக்கிணறு மீள்புனரமைப்புச் செய்யப்பட்டது.

மீள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கிணறு அபிவிருத்தி தொடர்பான உட்கட்டுமான வேலைகள் (சுற்று வட்டம் அமைத்தல்) முழுமை பெறவில்லை.

நிதி வழங்கிய நிறுவனம் கிணறு சுற்று வட்டம் கட்டுவதற்கோ அல்லது அதற்கான உபகரணம் வழங்குவதற்கோ பூரணமான பங்களிக்காததாலேயே குடிநீர் வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை வேலைத் திட்டத்தை பொறுப்பேற்ற சங்கமும் பாராமுகமாக உள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

(201-302)

## இயக்குநர் சபை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடமாட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்சபை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார்.

மூன்று பெயர் கொண்ட இந்தத் தற்காலிக இயக்குநர் சபையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ் கந்தகுமார் அதன் தலைவராக உள்ளார்.

(201-224)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜீவனோபாய கடன் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தென்மராட்சிப் பிரதேசத்தில்' உள்ள எட்டு கிராம சமூக முன்னெடுத்தல் குழுக்களுக்கு தலா 70 ஆயிரம் ரூபா வீதம் வாழ்வாதார முயற்சி ஜீவனோபாய கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை சர்வதேச ஹெயர் நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காக சமூக முன்னெடுத்தல் திட்டத்தின் கீழ் குழுக்களுக்கு சுழற்சி முறைக் கடன்கள் கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டன.

இத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இரு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆறு சனசமூக நிலையங்கள் ஊடாக இக் கடன்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(201-207)

## நுணாவில் பொது நூலகம் தனியார் கட்டடத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் கிளைப் பொது நூலகம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கவுள்ளது.

தற்போது நூலகம் இயங்கும் கட்டடம் மாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்படவுள்ளதால் தற்காலிகமாக மட்டுவில் தெற்கில் இயங்குமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

(201-207)

## பண்.மெய்கண்டானுக்கு காணிகள் அன்பளிப்பு

சுழிபுரம், ஜூலை 17

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கு ஈ.கே.எஸ்.பி. திட்டத்தின் கீழ் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையால் ஐந்து காணிகள் வழங்கபட்டுள்ளன.

(201-28)

## 'அபிராமி அந்தாதி நூல் பெறலாம்

சுழிபுரம், ஜூலை 17

அபிராமி அந்தாதி நூறு பாடல்களை உள்ளடக்கிய அம்மன் படத்துடன் அமைந்த நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலமாகப் பெறவிரும்புவோர் ஐந்து ரூபாய் முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை செயலாளர், பஜனைச்சபை, வழக்கம்பரை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். செயலாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டும் நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

(201-28)

## வாக்காளர் இடாப்புகள் மக்கள் பார்வைக்கு

நவாலி, ஜூலை 17

மானிப்பாய் பிரதேச செயலகத்தில் வாக்காளர் இடாப்புகள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அலுவலக நேரங்களில் வாக்காளர் இடாப்புகளை பார்வையிட முடியும் என மானிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

(201-100)

## 'நிஷா'வால் பாதிக்கப்பட்டோர் கூரைத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்

நவாலி, ஜூலை 17

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 'நிஷா' புயல் மழையினால் வீடுகள் பாதிக்கப்பட்டு கூரைச் சீற்றுக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் அதற்குப் பதிலாக கூரைத் தகடுகள் வழங்கவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள தமக்கு வழங்கப்பட்ட இலக்கத்துண்டுகளை எடுத்துச் சென்று மானிப்பாய் பிரிவு கியூமெடிக்கா நிறுவனத்தில் கூரைத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் ப.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

(201-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் எதிர்கால அரசியலில் திருப்பத்தை ஏற்படுத்தும் தேர்தல்

## தமிழரசுக் கட்சியின் கொள்கைப் பிரகடனம்

### யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி விடுத்துள்ள கொள்கை விளக்கம் இது

*யாழ்.மாநகர வாக்காளப் பெருமக்களே!*

யாழ்ப்பாணம் தமிழர் பாரம்பரியமிக்க வரலாற்றையும் அவர் தம் தொன்மை மிகு பண்பாட்டினையும் உயர் நாகரிகத்தின் செழுமையையும் உலகுக்கு எடுத்துச் சொல்லி நிற்கும் வளம்மிக்க தமிழ் நிலமாகும். இதனைப் பாதுகாக்கவேண்டித்தான் நம்மை நாம் ஆளவேண்டும் என இத்தனை ஆண்டுகாலமும் தமிழ் மக்கள் போராடி வந்திருக்கிறார்கள். அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்.

இத்தனை செழுமைமிகு வரலாற்றையும், தமிழினத்தையும், தமிழர் போராட்டத்தையும் அழித்துவிட்டு பௌத்த, சிங்கள பேரினவாத அரசின் ஆதிபத்தியத்தையும் அதன் கொடியையும் தமிழ் நிலத்திலும் நிலைநாட்டிக் கோலோச்சுவதற்கு இன்றைய ஸ்ரீலங்கா அரசு கங்கணங்கட்டி நிற்கின்றது. நாடு முழுவதையும் பௌத்த, சிங்கள மயமாக்குவதே மஹிந்த சிந்தனையின் இலக்காகும்.

இந்த இலக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக வன்னியில் முன்னெடுத்த அரசின் போர் நடவடிக்கைகளின் பொழுது இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் காப்பகம் உள்ளிட்ட பல நாடுகளும் சர்வதேச சமூகமும் சர்வதேச மட்டத்தில் இக்குற்றங்கள் விசாரிக்கப்படவேண்டும். இந்த அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தி வருகின்றன.

இந்நிலைமைகள் இவ்வாறு இருந்தபோதிலும் இலங்கை அரசுடன் அமைச்சர்களாகவும் ஒன்றுபட்டு இயங்கியவர்களாகவும் ஆதரித்தும் நின்றவர்கள் போரில் பாவிக்கத் தடை விதிக்கப்பட்ட ஆயுதங்களைப் போர் முனையில் பாவிக்கப்பட்டதாக அரசிற்கெதிராகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தபோதும், எம் மக்கள் ஆயிரமாயிரமாய் கொன்றொழிக்கப்பட்டபோதும், வாய் திறக்காமல் அரசுடன் ஒத்துழைத்து நின்றவர்கள் இப்பொழுது தமிழ் மக்களின் பாதுகாவலர் தாமே என்று, அதற்காக ஒரு தேர்தலையும் சிந்திய செந்நீரும், கண்ணீரும் காயும் முன், எம்மக்கள் மீது திணித்துவிட்டு, வாக்குக் கேட்டு வருகிறார்கள் என்பதுதான் ஆச்சரியம், பரிதாபம்.

ஒன்றிணைந்த வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம், தமிழினப் பிரச்சினைத் தீர்விற்கு ஓர் அத்திபாரக் கல்லாக இருந்தது. அதனை மஹிந்த அரசு பிரித்துவிட்டபொழுதும் இவ்வாறேதான் அரசை ஆதரித்து நின்றவர்கள் விட்டுக்கொடுத்தனர். இப்பொழுது கிடைப்பதை ஏற்றுக்கொள்வோம் என்கின்றார்கள்.

நம் தமிழ் நிலத்தில் நாம் வாழவேண்டுமானால் தமிழும் தமிழரும் தம் நிலத்தில் தம்மை ஆளவேண்டும். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபொழுது தமிழ் மக்களின் இறைமையும் தமிழ் மக்களிடம் மீண்டு வந்துள்ளது என்பது சட்ட அறிஞர் நிலைக்களனாகும். இதன் அடிப்படையில்தான் ஐரோப்பியரிடம் இழந்த தமிழ் அரசின் சுதந்திரத்தை எம் மக்கள் மீட்கவேண்டும் என்று சொன்னார் தந்தை செல்வா. தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமைத் தத்துவம் தமிழ் மக்களிடம் நிலைத்திருக்கிறது. இத்தத்துவங்களின் அடிப்படையில் காலம் கருதி வடக்கு, கிழக்கு எனும் ஒன்றுபட்ட தமிழர் தாயகத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி [தன்னாட்சி] உரிமையை நிலைநாட்டும் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றினைத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தயாரித்து வருகின்றது. இதனை வென்றெடுப்பதற்கான வழிமுறைகளையும் உபாயங்களையும் ஆராய்ந்துள்ளது.

இத்தகைய ஓர் அரசியல் தீர்வினை அடைவதற்கு ஜனநாயக வழிமுறைகளையும் இராஜதந்திர முறைகளையும் சாத்வீகப் போராட்ட முறைகளையும் கடைப்பிடிப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது.




இருப்பினும் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் அவசரமாகவும் முன்னுரிமை அடிப்படையிலும் முன்னெடுக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றைக் கருதுகின்றோம்.

1.1 வன்னியிலிருந்து அநாதரவாக வெளியேற்றப்பட்ட எம் தமிழ் உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக முள்ளுக்கம்பி வேலிகளுக்குள் இராணுவம் சுற்றி வளைத்துள்ள கூடாரங்களுக்குள் அடைக்கப்பட்டவர்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும்.

1.2 மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகளான அம்மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்குள்ள உரிமை, தங்கள் சொந்த வாழ்விடங்களில் மீள குடியமர்த்தப்படுவதற்குள்ள உரிமை, அம்மக்கள் உயிர் வாழும் உரிமை என்பன உத்தரவாதப்படுத்தப்படவேண்டும்.

1.3 தம்மிடம் சரணடைந்ததாக அரசினால் கூறப்படும் சுமார் பத்தாயிரம் இளம் தமிழர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி எதிர்கால வாழ்க்கையில் அவர்கள் ஈடுபடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

1.4 வன்னிப் போரிடையே சிக்கி மனிதப் பேரவலத்திற்குள்ளானோரின் விவரங்கள் வெளியிடப்பட வேண்டும்.

1.5 மனித பேரவலத்திலிருந்து தப்பித்துள்ள மக்கள் தங்கள் வாழ்விடங்களில் தங்கள் வாழ்வாதாரங்களைத் தாம் கட்டியெழுப்ப இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் பூரண உதவிகளை வழங்க முன்வந்திருப்பதால் மீள்குடியேற்றத்தை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

1.6 போர்ச்சூழலுக்குள் சிக்கிய தமிழ் மக்களைத் தம் உயிரைப் பணயம் வைத்து முடிந்தளவு காப்பாற்றிய தமிழ் மருத்துவர்களும் முல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்படவேண்டும்.

1.7 போர் காரணமாகத் தமிழ்ப் பிரதேசங்களில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர், இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பன அகற்றப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ் விடயங்கள் தொடர்பாகக் குறிப்பாக இந்தியத் தலைவர்களுடனும் சர்வதேச இராஜதந்திரிகளுடனும் ஐ.நா. மற்றும் மனித உரிமை அமைப்புகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. இலங்கை அரசுடனும் மிக விரைவில் பேச்சு நடத்த முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களிடையே உள்ள அரசியல் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த மக்கள் பிரதிநிதிகளுடனும் ஜனநாயக சக்திகளுடன் புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதன்மூலம் போரினால் மனித பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கும் மக்களின் விடிவிற்கும் தமிழ் - முஸ்லிம் மக்களின் விடுதலைக்கும் த.தே.கூட்டமைப்பு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

2.1 அடுத்து வர்த்தகம், விவசாயிகளின் உற்பத்திப் பண்டங்களின் ஏற்றுமதி, கடல்சார் உணவுப் பொருள்களின் ஏற்றுமதி மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதி, நுகர்வோர் கொள்வனவும் பயன்பாடுகளும் தங்கு தடையின்றிச் சுதந்திரமாகக் கையாளப்படவேண்டியது அவசியமாகின்றது.

2.2 பல நூற்றுக்கணக்கான இளம் குடும்பத்தினர்கள் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும், காணாமற்போயுமுள்ளனர். இத்தகைய மனித உரிமை மீறல்களை மதிப்பீடு செய்வதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதுடன் மனிதாபிமான அடிப்படையில் பாதிக்கப்பட்ட இக்குடும்பங்களுக்கு ஆக்கபூர்வமான செயற்திட்டத்தின் மூலம் அவர்களது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவிடவும் வேண்டும்.

2.3 தேர்தல் காலத்திற்கு என்ற சலுகைகள் அல்லாமல் மீனவர்கள், கரையோர மக்கள், கடலில் கடற்றொழிலில் நிலையாகவும் சுதந்திரமாகவும் ஈடுபடவும் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பவும், வீட்டு வசதிகளை ஏற்படுத்தவும், கடல்சார் தொழிலுக்கான விற்பனை மையங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளுக்கும், பொருத்தமான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

3. யாழ்.மாநகர சபைப் பிரதேசம் யாழ்ப்பாணத்தின் தலைநகரம். யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் பண்பாட்டு மையம். தமிழர்களின் மொழி, கலை, கலாசாரத்தின் உயர் நாகரிகத்தின் தொட்டிலாக நிலவுகின்றது. இப்பட்டிணத்தின் அழகும், பொலிவும், கட்டமைப்புகளும் போரினாலும் சீரான நிர்வாகம் இன்மையாலும் சீர்குலைந்து போயுள்ளது.

3.1 இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள், கட்டடங்கள், வீடுகள், கைப்பற்றப்பட்டுள்ள குடியிருப்புகள் மீட்கப்பட்டு மீண்டும் பொலிவுற புனரமைக்கப்படுவதற்கென அறிஞர்கள், நிபுணர்களைக் கொண்ட திட்டக்குழு நிறுவப்படவேண்டும். அதன் தீர்மானங்களின் அடிப்படையில் யாழ்.நகரம் புனரமைக்கப்படும். நிர்வாகக் கட்டமைப்பும் நகர நிர்மாணமும் உயர் தரத்தில் முன்னெடுக்கப்படும். யாழ்.நகரம் முதல்தர பசுமை நிறைந்த நகரமாகச் சர்வதேச தரத்தில் கட்டியெழுப்பப்படும். இதற்கான பொது மக்களின் கருத்துக்களும கவனத்தில் எடுக்கப்படும். முன்னேற்றமடைந்த பிறநாட்டு நகரங்களுடன் கூட்டிணைப்புத் திட்டங்களின் பொருட்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும்.

3.2 நலிவடைந்தோர், பெண்கள், சிறுவர், முதியோர் நல்வாழ்வு மேம்படவும் இளைஞர் நல்வாழ்விற்கான பொருத்தமான திட்டங்களும் வகுக்கப்படும். யாழ்.நகரின் சுகாதாரம், சுத்தமான குடிதண்ணீர் உத்தரவாதப்படுத்தப்படும்.

[10ஆம் பக்கம் பார்க்க...]

# மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு தீர்வு கிட்ட தேர்தல் உதவும்

## ஈ.பி.டி.பியின் கொள்கை அறிக்கையில் தெரிவிப்பு

### யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. கட்சி விடுத்துள்ள கொள்கை விளக்கம் இது

*வீணையா?.... வெற்றிலையா?....*

*விட்டுக்கொடுக்க முடியாத இலக்கை எட்டிவிட நாம் என்ன செய்யவேண்டும்....?*

*நேசமிக்க எம் தேசத்து மக்களே!....*

எமது அரசியல் இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தில் இதுவரை நாம் கடந்து வந்த தூரமும், சுமந்து வந்த பாரமும் அதிகம். இனி நாம் கடந்தும், சுமந்தும் செல்ல வேண்டியது சொற்பமானவைகளே!...

எமது அரசியல் இலக்கு நோக்கி நாம் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் தொடர்ந்தும் உழைத்து வருகின்ற இன்றைய சூழலில், தேர்தல் ஒன்று எம்மைத் தேடி வந்திருக்கின்றது!... ஈ.பி.டி.பியினராகிய நாம் அதில் போட்டியிட்டே ஆகவேண்டும்!!

ஆனாலும், தேர்தலுக்காக மட்டும் காத்திருந்து கடை விரிப்பவர்கள் நாமல்ல. எமது தேசம் விரைவாக விடியவேண்டும் என்று, அதற்காகத் தடைகள் தகர்த்து உழைப்பவர்கள் நாம்.

ஆடிக்காற்றில் அம்மியும் அசையும் என்பார்கள்!... ஆனாலும் ஈ.பி.டி.பியினராகிய நாம் பெரும் புயலை எதிர்கொண்டு, பலத்த சவால்களுக்கு மத்தியிலும் யாராலும் வெட்டிச் சரித்துவிடமுடியாத பெரு விருட்சமாக இன்னமும் வீரியத்துடன் எழுந்து நிற்கின்றோம்! எமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் விழுதுகள் பரப்பி, எமது மக்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் கொடுத்து வளர்ந்து நிற்கின்றோம்.

இதற்குக் காரணம், கடந்த காலங்களில் நடைமுறை யதார்த்தங்களை உணர்ந்து நாம் எடுத்துக்கொண்ட தீர்மானங்களும், அரசியல் வழிமுறையும் தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

காலத்திற்குக் காலம் நிகழ்ந்து வந்த ஆட்சி மாற்றங்களின் போதும், எம் போன்ற மாற்று ஜனநாயக சக்திகளை ஓரங்கட்டி, அழித்தொழித்து விடுவதற்காக புலிகளின் தலைமையால் யு.என்.பி அரசுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போதும் நாம் அழிக்கப்பட்டு விடுவோம் என்றும், ஓரங்கட்டப்பட்டு விடுவோம் என்றும் கனவு காணப்பட்டது.

ஆனாலும் காலச்சூழலை உணர்ந்து, அதற்கு ஏற்றவாறு நாம் எடுத்துக்கொண்ட அரசியல் நிலைப்பாடுகளும், எமது மன உறுதியும், நம்பிக்கை தரும் வழிகாட்டலும் இதுவரை எம்மை பாதுகாத்து வருகின்றது.

இதனால், ஈ.பி.டி.பியினராகிய நாம் இன்னமும் மாபெரும் மக்கள் கட்சியாக, எவராலும் அழித்துவிட முடியாத உறுதிமிக்க தலைமையாக மக்கள் பலத்திலும், எங்கள் நிலத்திலும் தொடர்ந்தும் இருக்க முடிந்திருக்கின்றது.

எமது சாதுரியமான வழிமுறையினால் எமது மக்களை நடுத்தெருவில் கைவிட்டு நாம் ஒருபோதும் ஓடிப்போகாமல், எம் மக்கள் மத்தியில் நிலைத்து நின்று மக்கள் பணியிலும், அரசியல் தீர்வு முயற்சியிலும் தொடர்ச்சியாக உழைத்து அதில் வெற்றி அடைந்து வருகின்றோம்!

சுவர் இருந்தால் மட்டும்தான் சித்திரம் வரையமுடியும். தமிழ் பேசும் மக்களை வழிநடத்தி செல்ல வேண்டிய நாம் எமது மண்ணில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதால் மட்டுமே எமது இலட்சியக் கனவுகளை எட்டிவிடமுடியும்.

யாருடன் பேசி எமது அரசியலுரிமைகளை வென்றெடுக்கமுடியுமோ அவர்களுடன் பகைமை பாராட்டாமல் நேசமுடன் கைகுலுக்கியே எமது அனைத்து உரிமைகளையும் நாம் வென்றெடுக்கமுடியும்.

இதை நாம் சாதித்துக் காட்டியும் இருக்கின்றோம்!... எமது தேசத்தின் அபிவிருத்தி, எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு, எமது மக்களுக்கான அரசியல் உரிமைக்கானத் தீர்வு என எமது மக்களின் வாழ்வியல் உரிமைகளை நாம் அரசாங்கத்துடன் கைகுலுக்கி நின்று எமக்குக் கிடைத்த அரசியல் அதிகாரங்களின் அளவிற்கு ஏற்றவாறு செய்து முடித்திருக்கின்றோம்.

அரசாங்கத்துடன் பகைமை பாராட்டி, ஊடக விளம்பரங்களுக்காக உணர்ச்சி பொங்கப் பேசி, வீர முழக்கமிட்டவர்கள் யாவரும் தாம் எடுத்துக்கொண்ட வழிமுறையினால் இதுவரை எதையும் சாதித்திருக்கவில்லை என்பதை உலகறியும்.

எதையும் சாதிப்பதற்கு மாறாக எமது மக்களின் இரத்தத்திலும், தசையிலும் சுயலாப அரசியல் நடத்தி, பொங்குதமிழ் என்று முழக்கமிட்டு, எமது மக்களின் இரத்தத்தைச் சூடேற்றி, வீதிக்கு இழுத்தவர்கள் இன்று எமது மக்களை நடுத்தெருவில் கைவிட்டு ஓடிப்போய் விட்டார்கள்.

இதுபோன்ற வெறும் சலசலப்பு அரசியலினால் கொன்று பலியாக்கப்பட்ட எமது மக்களின் பிணங்களின் மத்தியில் நின்று நாம் தோற்றுவிட்டோம் என்ற துயரங்களைச் சொல்லி அழுகின்ற எச்சசொச்சங்களே இங்கு மிஞ்சியிருக்கின்றன.

ஆனாலும் எமது இலக்கு தோற்றுப்போன ஒன்றல்ல! எமது மக்கள் தோற்றுப்போன மனித சமூகமும் அல்ல. அதுபோலவே எமது நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறை என்பதும் தோற்றுப்போனது அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள்.

*எம் இனிய மக்களே!*

அரசாங்கத்தை எதிர்ப்பது என்பது தவறானது அல்ல. ஆனாலும் வெறும் சுயலாபங்களுக்காக மட்டும் எதிர்ப்பு அரசியலை நடத்துவதையே நாம் தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அளவிற்கு மீறிய வெறும் சுயலாபங்களுக்கான எதிர்ப்பு அரசியலால் எமது மக்கள் நடுத்தெருவில் தூக்கி வீசப்பட்டிருக்கிறார்கள். நலன்புரி முகாம்களுக்குள் எமது மக்கள் தமது வாழ்க்கையைத் தொலைத்து விட்டிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரை கிடைத்த அரசியல் தீர்வு முயற்சிகள் யாவும் அர்த்தமற்ற எதிர்ப்பு அரசியலால் முளையிலே கிள்ளி எறியப்பட்டிருக்கின்றன.

எமது மக்களை அழிவு யுத்தத்திற்குப் பலிகொடுத்து, தம்மையும் அழியக்கொடுத்து, வெறும் பூச்சியங்கள் மட்டுமே இதுபோன்ற எதிர்ப்பு அரசியலால் எம் முன்னால் அனுபவங்களாக விரிந்து கிடக்கின்றன.

1977இல் தமிழீழத்திற்கான ஆணை கேட்டு அதில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் போனவர்கள் எமது இளைய சந்ததியின் இரத்தங்களைச் சூடேற்றிவிட்டு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாமல் ஓடி ஒளிந்து, தமிழகத்தில் தனி வீடு கேட்டுப் பாதுகாப்பாக தங்கியிருந்ததுதான் மிச்சம். இந்தத் தவறுகளுக்காக வருந்திய அண்ணர் அமிர்தலிங்கம் உட்பட்ட தலைவர்கள் சிலர் அநியாயமாகக் கொல்லப்பட்ட நிலையில் அதே தவறுகளை அவர்களில் சிலர் இன்னமும் இன்றுவரை இழைத்து வருகின்றனர்.

அப்போது நிகழ்ந்த ஆயுதப்போராட்டம் என்பது நீதியான ஒரு போராட்டமாகவே இருந்தது. ஆனாலும் அன்று எதிரி என்று கருப்பட்டவர்களுக்கு எதிராக ஏந்தவேண்டிய துப்பாக்கிகளை புலிகளின் தலைமை எம் போன்ற சகோதர விடுதலை அமைப்புகளுக்கு எதிராக நீட்டியதால் அது அநீதியான ஓர் அழிவு யுத்தமாக மாறியது. இந்நிலையில்.......

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற பொன்னான வாய்ப்பு எம்மைத் தேடி வந்தது. அப்போதும் கூட அதை ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்குப் புலிகளின் தலைமை முன்வந்திருக்கவில்லை. மாறாக அந்த ஒப்பந்தத்தை பிரேமதாசா அரசுடன் இணைந்து புலிகளின் தலைமை அழித்துச் சிதைத்திருக்காவிட்டால் இன்று இந்த நிலைமை எமக்கு ஏற்பட்டிருக்காது.

கடந்த 2004இல் நடந்த பொதுத்தேர்தலின் போது தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர். தவறான வழிமுறையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் தமது அரசியல் அதிகாரங்களைச் சரியான முறையில் அவர்கள் பயன்படுத்தியிருக்கவில்லை.

வரலாற்றில் ஒருபோதுமே கிடைத்திருக்காத 22 நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அதிகாரப் பலங்கள் யாவும் வெறும் சுயலாபங்களுக்காகவும் எதிர்ப்பு அரசியலுக்காகவும் பயப்படுத்தப்பட்டதில் எமது மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை.

அந்த அரசியல் பலம் என்பது சரியான சக்திகளின் கரங்களில் கிடைத்து, சரியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் எமது மக்கள் இன்று சுதந்திரப் பிரஜைகளாக வாழ்ந்துகொண்டிருப்பார்கள். எமது வரலாற்று வாழ்விடம் சுயாட்சி பெற்ற மாநிலமாக மாறியிருக்கும். அழிவுகளையும், அவலங்களையும் காணாத மனித இனமாக எமது மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொண்டிருப்பார்கள்.

ஆகவே, நாம் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் நின்றே தொடர்ந்தும் எமது உரிமைகளுக்காக உழைக்க விரும்புகின்றோம். மாறிவரும் சூழலை கவனத்தில் எடுத்து, நின்று நிதானித்து எமது பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவே தீர்மானித்திருக்கின்றோம்.

இதுவரை நாம் சுமந்து வந்த இலட்சியக் கனவுகளை, எட்டவேண்டிய இலக்கை எட்டி விடுவதற்கு முன்பாக இறுதித் தருணத்தில் நின்று எல்லாவற்றையும் கொட்டிச் சரித்துவிட முடியாது!

நடைமுறை யதார்த்தங்களை கருத்தில் எடுத்தே நாம் எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைகளிலும் போட்டியிடத் தீர்மானம் எடுத்திருக்கின்றோம்.

கடந்த காலங்களில் நாம் எமது மக்களின் விருப்பங்களை ஏற்று அரசாங்கத்தில் அமைச்சு பொறுப்பெடுத்து அதில் அங்கம் வகித்திருந்தாலும், நடந்து முடிந்த தேர்தல்களில் எமது மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வீணைச் சின்னத்திலேயே போட்டியிட்டு வந்திருக்கின்றோம்.

இந்நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் நாம் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து அரசாங்கத்துடன் மட்டுமன்றி, எமது மக்களாகிய உங்களுடனும் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றோம்.

தேர்தலை எதிர்கொள்ளும் இன்றைய சூழலில் எமக்கு முன்பாக விரிந்து கிடக்கும் பாரிய வரலாற்றுக் கடமைகளையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

[10ஆம் பக்கம் பார்க்க...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது 2008

உதயன் ஆரம்பிக்கப்பட்ட 1985 ஆம் ஆண்டின் பிற்பகுதி ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வீச்சுக் கொண்டவேளை. அது புதிய பரிமாணத்துக்குள் பிரவேசித்த காலம் என்றும் சொல்லலாம். தமிழ் இளைஞர்களின் பல ஆயுதக்குழுக்கள் ஒரு புறமாகவும், அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் இன்னொரு பக்கமாகவும் மோதத் தொடங்கிய காலம் அது.

அதனால் நடுநிலைமை பேணிய 'உதயன்' ஆரம்பத்தில் இருந்தே அந்தக் காலத்தைய பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், அழுத்தங்களைச் சிறிய அளவுகளில் எதிர்கொள்ள நேர்ந்தது.

அதே நிலைமை வெவ்வேறு அளவுகளில், வடிவங்களில் தொடர்ந்தன. இப்போதும் இடர்கள், இன்னல்கள், பூதாகாரமாகிப் பத்திரிகை வெளிவருவதைத் தடுக்கும் நிலையைத் தாண்டி நிர்வாகிகள், ஊழியர்கள் உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் உதயன் மக்களுக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகளை, தொண்டைச் செய்வதற்கு பேராற்றல்மிக்க இறையருளும் மக்களும் பக்கத்துணையாக நின்று உரமூட்டி வருகிறார்கள். எல்லாப் பெருமையும் புகழும் அவர்களுக்கே. உதயனுக்கு வந்த சோதனைகள்; அச்சுறுத்தல்களில் சில கீழே தாப்பட்டுள்ளன.





1998 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகத் துணிச்சலான பத்திரிகைக்கான விருதுக்குரிய பத்திரிகையாக இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் 'உதயன்' பத்திரிகை தேர்ந்தெடுக்கப்பட்டது. கொழும்பு டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் 1999 மே மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ்ப்பாணத்திலிருந்து 'உதயன்' பிரதம ஆசிரியரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சென்று விருதைப்பெற போக்குவரத்து வசதியீனம் நிலவியதால் 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அவ்விருதினைப் பெற்றுக்கொண்டார். 2000 ஆண்டு மார்ச் மாத கடைசி வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா ஜோய் டபீல்ட் அம்மையார் மார்ச் 24 ஆம் திகதியன்று 'உதயன்' பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு அந்த விருதை 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட இப்படத்தில் 'உதயன்' நிர்வாக இயக்குநரும் ஆசிரியர்பீட உயர் அலுவலர்களும் காணப்படுகின்றனர்.

## உதயனுக்குக் கிடைத்த அரிய விருது நமது மண்ணுக்கும் இனத்துக்கும் கிடைத்த பெருமை



இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான 2008ஆம் ஆண்டு விருது உதயனுக்கு வழங்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடையும் பல்லாயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன்.

உதயனின் உருவாக்கத்தில் இருந்து அதன் உயர்ச்சியையும், வளர்ச்சியையும் மட்டுமன்றி அவன் சந்தித்த ஏற்றத்தாழ்வுகளையும், எதிர்பார்ப்புகளையும் அவற்றை எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்கின்ற விதத்தையும் அவற்றினூடே புடம் போட்ட தங்கம் போல பிரகாசித்து நிற்பதைக் கண்டு பிரமிப்படைகின்றேன். உதயனின் இருபத்திநான்கு வருடகால வரலாற்றை நெருக்கமாக அவதானித்தவன் என்ற வகையில் பெரும் பூரிப்படைகின்றேன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழுக்கு இந்த நாடுபூராகவும் அடங்கிய விருது கிடைத்தமை நமது மண்ணுக்கும் பெருமை, நமது இனத்திற்கும் பெருமை. இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து தமிழ்பேசும் மக்களினதும் உணர்வுகளையும், அபிலாசைகளையும், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் தூர்ந்து போகாமலும், தொய்வடைந்து போகவிடாமலும் முன்னெடுத்த பெருமை ''உதயனுக்கே'' உரியது.

நடந்து வந்த பாதையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு இன்னல்களையும், இடையூறுகளையும் சந்தித்த போதும் தன் பணியை தளராது முன்னெடுத்து மனித உரிமைகளுக்கும் மானிடத்திற்கும் தமிழின தன்மான உணர்வுகளுக்கும், தளம் போல விளங்கியமைக்கு கிடைத்த விருதாகவே இதை நான் பார்க்கிறேன். உதயன் நிர்வாகத்திற்கும் ஆசிரிய பீடத்திற்கும் அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

சி.வி.கே.சிவஞானம்
முன்னாள் ஆணையாளர், யாழ்.மாநகரசபை

## உதயனுக்கு இந்த விருது மிகப் பொருத்தமானதே

பல்வேறு அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் தமிழ் மக்களின் துன்பங்களை வெளிக்கொணர்ந்த 'உதயன்' பத்திரிகைக்கு ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான அதிஉயர் விருது கிடைத்தமை பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியதாகும். அதனை வலிகாமம் உதைபந்தாட்ட லீக் பாராட்டி வரவேற்கின்றது. எந்தவொரு நெருக்கடியான சூழ்நிலையிலும் தளர்ந்து, துவண்டு போகாமல், நிமிர்ந்து நின்று உண்மையை உலகுக்கு எடுத்துரைத்த உதயனின் துணிகரப் பணியை எவரும் என்றுமே மறக்கமாட்டார்கள். தனக்கே உரிய தனித்துவமான பாணியில் செய்திகளை வெளியிட்டு தமிழ் மக்களின் மனங்களை வென்ற உதயனுக்கு இந்த விருது வழங்கப்பட்டமை சாலப் பொருத்தமானதே. யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைக்கு 'உதயன்' வழங்கிவரும் ஆதரவுக்கும் இந்நேரத்தில் எமது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும். உண்மையை உள்ளபடியே எழுதும் அவனது துணிச்சலான பணி என்றும் இடைவிடாது தொடர நாம் வாழ்த்துகின்றோம்.

செயலாளர், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்.

## சவால்களை எதிர்கொள்ளும் சேவைக்கு கௌரவம்

ஜனநாயகம், கருத்துச் சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்காத சக்திகளின் பலதரப்பட்ட அச்சுறுத்தல்கள், அராஜக நடவடிக்கைகளின் மத்தியிலும் துணிச்சலுடன் எதிர் நீச்சலடித்து பத்திரிகா தர்மத்தை நிலைநாட்டிவரும் 'உதயன்' பத்திரிகையும் அதன் அனைத்து பணியாளர்களும் ஆற்றிவரும் மக்களுக்கான ஜனநாயகக் கடமைகளுக்குக் கிடைத்த கௌரவம் இந்த விருது.

திருமதி இ. கௌரி, புங்குடுதீவு,
உதயன் வாசகர்.

## உதயன் சந்தித்த நெருக்கடிகள், இழப்புக்கள், அழுத்தங்கள் சில....

★1999 ஒகஸ்ட் 21 இல்... உதயன் அச்சிடப்படும் இயந்திரங்களை நாசமாகக்கி அதன் வெளியீட்டைத் தடுக்கும் நோக்குடன் துணை இராணுவக் குழுவினால் இரவில் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

★ 2001 ஜூன் மாதம் 23 இல்....பிரதம ஆசிரியரை விபத்து என்ற போர்வையில் கொலை செய்வதற்கு யாழ்.நகரின் பிரதான வீதி ஒன்றில் வைத்து முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவர் கடும் காயங்களுடன் தப்பினார்.

★ 2005 ஒகஸ்ட் 23 இல்... கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்திருந்த உதயன் விளம்பரப் பணிமனை மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பணிமனை அமைந்திருந்த கட்டடச் சொந்தக்காரருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற நேர்ந்தது.

★ 2006 மே 2 இல்... உலகப் பத்திரிகைச் சுதந்திர நாளுக்கு சிலமணி நேரமே இருக்கும்போது, மே மாதம் இரண்டாம் திகதி இரவு உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் கூட்டம், பணியாளர்கள் இருவரைச் சுட்டுக் கேள்வி எதுவுமின்றி சுட்டுக்கொன்றது. அவர்களின் துப்பாக்கிச் சூட்டில் மற்றும் இருவர் படுகாயமடைந்து உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளனர். பத்திரிகையை அச்சிடும் பிரதான சாதனங்களில் ஒன்றான கணினிப் பிரிவு சுட்டுப்பொசுக்கப்பட்டுப் பல லட்சம் ரூபா நஷ்டம் விளைவிக்கப்பட்டது.

## மக்களுக்காக உழைப்பவன் உதயன்



பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான விருது உதயனுக்கு கிடைத்தமையை அறிந்து பேருவகை அடைந்தேன். நெருக்கடிகளும் வேதனைகளும் சூழ்ந்த வேளைகளில் கூட எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உழைப்பவன் 'உதயன்'.

இதனால் அவன் சந்தித்த இழப்புகளும் ஏராளம். எனினும், இழப்புகளில் இருந்து இன்னமும் வலிமையோடு உயிர்ப்படைந்து மக்களின் உரிமைக்கான குரலாக என்றென்றும் குரல் கொடுப்பவனாகவும் உதயனே விளங்குகின்றான். சரியான தருணத்தில் பொருத்தமான விருது உதயனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அவன் இன்னமும் பல விருதுகளை வென்றெடுத்து மக்கள் பணியை முன்னைப் போன்று தொடர்ந்திட ஆசித்து அக மகிழ்கின்றேன்.

எஸ்.டானியல் தியாகராஜா
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை.

## மக்களின் அபிமானப் பத்திரிகை என்பதற்கு இந்த விருது சான்று



இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து வழங்கும் இலங்கைப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்ததற்கான அதிஉயர் கௌரவ விருது 'உதயன்' பத்திரிகைக்கு கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நெருக்கடியான காலகட்டங் களில் எல்லாம் பலவகைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியி லும் துணிந்து நின்று நடுநிலையான செய்திகளை வழங்கி மக்களின் அபிமான பத்திரிகையாக தொடர்ந்தும் நிலைத்து நிற்பது இவ்விருது கிடைத்ததற்கு சான்றாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு என்னதேவை என்பதை உணர்ந்து அத்துறை சார்ந்தவர்களைத் தாமே தொடர்புகொண்டு கட்டுரைகளை எழுத ஊக்குவித்து அவற்றைப் பிரசுரித்து எழுத்தாளர்களை உருவாக்கி ஊக்குவித்ததோடு அவ்வெழுத்துக்கள் மக்களைச் சேர ஒரு பாலமாக விளங்கி சேவை செய்து வருவதும் 'உதயன்' பத்திரிகையே. அந்த வகையில் என்னுடைய எழுத்தாற்றலையும் வளர்த்துவிட்ட பெருமையில் ஒரு பகுதி உதயனையே சாரும்.

அதற்காக துணிவுடனும் மனம்ஒன்றியும் உழைக்கும் 'உதயன்' பிரதம ஆசிரியருக்கும் அவர் சார்ந்த ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு உதயனின் மக்கள் சேவை மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

நா.சிவயோகன், சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்னாள் தலைவர், பௌதிகவியல்துறை,யாழ்.பல்கலைக்கழகம்.

## தடைகளைத் தாண்டி மக்கள் சேவை செய்பவன்

'உதயன்' பத்திரிகைக்கு பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்ததற்கான விருது கிடைத்ததை ஒட்டி எங்கள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக 'உதயன்' பத்திரிகை மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில் உழைத்து வருகின்றது. தமிழ் மக்கள் இத்தீவில் அடக்குமுறைகளையும், பல்வேறு துயரங்களையும் அனுபவித்த காலத்திலிருந்து இயங்கி வருகின்றது. அதாவது தமிழ் மக்களின் துயர வரலாற்றில் பின்னிப்பிணைந்து பிரச்சினைகளை வெளிப்படுத்தி வருகிறது.

துணிச்சலான ஒரு பத்திரிகை இத்தீவில் எதிர்கொள்ளவேண்டிய நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் என்பன உதயனுக்கு விடுக்கப்பட்டபோதும் தொடர்ந்தும் தடைகளைத் தாண்டி மக்களுக்கான ஓனது சேவையை ஆற்றிக்கொண்டிருக்கிறது.

பாதைகள் மூடப்பட்டு, தொடர்புகள் துண்டிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் நெருக்கடியான காலங்களிலும் தொடர்ச்சியாக இயங்கி யாழ்ப்பாண மக்களின் செய்தி அறியும் தேவையை நிறைவேற்றியதுடன் யாழ்ப்பாணத்து நிலவரங்களை வெளி உலகத்திற்கு வெளிப்படுத்தி தொடர்ந்தும் தமிழ் மக்களின் குரலாக பாதுகாப்பையும் தீர்வையும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

'உதயன்' பத்திரிகையின் துணிச்சலான இந்தப்பணிக்கு இவ்விருது கிடைத்ததை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகி நாம் எங்கள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். தொடர்ந்தும் 'உதயன்' [illegible] பணியை ஆற்ற எங்கள் வாழ்த்தையும் விருப்பத்தையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளிப்படுத்தி நிற்கிறது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவில்

## திருக்கார்த்திகைத் திருவிழா

## சிறப்பிதழ் - 17.07.2009





### கார்த்திகைக் குமரனின் கழல் தொழுவோம்



அமரர் படு துயர் தீர அசுரர்செய் கொடுமைகளை
அழித்தருள் நல்கவென்றே
அரன்திரு விழிமலர் தனிலெழு கதிராறு
பொறிகளும் தீயிலாடி
சேமமுற வருகங்கை தனிலாடி வந்துமே
வற்றாத சரவணத்தில்
செழிப்புற வளர்தா மரையாறு மலரிலும்
தெய்வவுருத் தாங்கியொளிர
உமையேகி அணைத்திட உருவொன்று ஆகியே
உம்பர்தம் துயரைவெல்ல
உற்றவழி இதுவென்று அன்னைதரு வேலேந்தி
உலகெலாம் வியந்து போற்ற
இமையவர் படைதாங்கி இடர்வென்று அமரரும்
இருகரம் குவித்து முருக
இனியசே னாதிபதி எனநின்ற தெய்வமே
இருகரம் கூப்புகின்றோம்

புலவர் சு.குகதேவன், கொல்லங்கலட்டி.

## கார்த்திகை மகிமை

தேவர்களது இடர்களைக் களைய சிவபிரான் தனது நெற்றிக்கண்ணூடாக ஆறு தீப்பொறிகளை எய்ய, அத்தீப்பொறிகளை அக்னியும் வாயுவும் மந்தாகினி கங்கைமூலம் சரவணப் பொய்கையில் சேர்க்கவும், சரவணப்பொய்கையில் மந்தாகினி தந்த மைந்தர்களாக ஆறு குழந்தைகள் தோன்றினர். இவ் ஆறு குழந்தைகளையும் மாலினி, கார்கி, ஹலிமா, பிரமினா, ஆர்யா, பலாலா, வைமித்ரா எனும் நாமம் கொண்ட கார்த்திகை மாதர்கள் பாலூட்டி ஆதரித்தனர். கார்த்திகைப் பெண்களால் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கப்பெற்றதனால் 'கார்த்திகேயன்' எனும் நாமத்தை இத் தெய்வசிகாமணிகள் பெற்றனர். பரமசிவன் இத் தெய்வப் பிள்ளைகளுக்கு நாமகரணஞ் சூட்டியபின் உமாதேவிக்குக் கூறுகையில்:

*'ஈங்கன நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை*
*தாங்கினள் கொண்டுசென்று சரவணத் திடுதலாலே*
*காங்கேயன் எனப்பேர் பெற்றான்- காமர்பூர் சரவணத்தின்*
*பாங்கரில் வருதலாலே சரவணபவ னென்றானான்*
*தாயெனவாரால் போந்து தனங்கொள் பாலருந்தலாலே*
*ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல்பேர் பெற்றான்*
*சேயவன் வடிவமாறுந் திரட்டி நீயொன்றாய்ச் செய்தாய்*
*ஆயதனாலே கந்தனாமெனும் நாமம் பெற்றான்'*

எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

மாதந்தோறும் நிகழும் கார்த்திகை நட்சத்திரம்கூடிய தினங்களும், குறிப்பாக ஆடிக் கார்த்திகை, திருக்கார்த்திகை தினங்களிலும் முருகப்பெருமான் பிரத்யட்சமாக தீபஒளி மூலம் தீப தரிசனம் செய்வோர்க்குத் திருவருள் சுரந்துநிற்கின்றார் என நாரதரிஷி தேவர்கட்கு விளக்கியுள்ளார்.

திருச்செல்வங்களைப் பெற்றுய்ய முருகப்பெருமானது கார்த்திகைத் தினங்கள்தான் மிகமிக முக்கியமானதாகும். நெய் விளக்கிட்டும், கற்பூரதீபமேற்றியும், பூசைகளின்போது காணும் தீப தரிசனங்களினாலும் முருகனது திருக்கோலத்தைப் பார்க்க முடியும். பக்தியோடு மாவிளக்கேற்றி அந்தத் தீபஒளியிலும் முருகனது காட்சியைக் காணஇயலும். மாவிளக்கேற்றி அத்தீப ஒளியில் முருகனைக் கண்டு, அந்த மாவிளக்கை முருகனுக்கே நிவேதித்து வள்ளி முருகனோடு இரண்டறக்கலந்த செய்திகள் புராணங்களிலுண்டு.

கார்த்திகை நாள்களில் ஏற்றும் தீபங்கள் ஞானதீபம், தீப ஜோதி, பரஞ்சுடர் என்றெல்லாம் விதந்து கூறப்படும். தீபதரிசனைபெற்ற ஆனந்தித்த கண்களே புனிதகண்களெனச் சங்கப் புலவரொருவர் பாடியுள்ளார்.

*'செப்பருங் கார்த்திகைத் திங்கள் முப்பது*
*மொப்பிலாக் குமரன் முன்னுள்ளத் தன்பினான்*
*மெய்படு மாவினெய் விளக்கு வைத்துளார்*
*சுப்பிரமணியன்றாட் டுணையிற் சேர்வரால்'*

கார்த்திகைத் தினங்களிலே முருகப்பெருமானை நெல்லியிலை பத்திரங்களால் பூசிப்போர் யாகம் செய்வித்த பலனைப் பெறுவர் என்பதை

*'நிலைதருங் கார்த்திகைத் தினத்து நெல்லியி*
*னிலைகொடு குகனடிக் கிறைத்து ளோரெலாஞ்*
*சொலுமிலைக் கொருமகந் தொடர்பினாற்றிய*
*பலனடைவாரெனப் பகரு நான்மறை'*

என திருச்செந்தூர் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

நாமனைவரும் நிறைவுகொண்ட வாழ்வுடன் புண்ணிய சீலர்களாக வாழ மாவைக் கந்தன் பாதம் பணிவோமாக.

'வேலும் மயிலும் உண்டே துணை'

சி.கணேசலிங்கம்

## சைவத்தின் மாண்பை உணர்ந்து ஒழுகிடுவீர்!

சூரியன் இன்றேல் பகல் இல்லை. சந்திரன் இன்றேல் நிலவில்லை. சூரிய சந்திரர்களை வல இடக் கண்ணாகக் கொண்ட சிவன் எப்போது தோன்றினாரோ அன்றே சைவமும் தமிழும் தோன்றிற்று. தமிழை ஒழுங்காக ஆராய சிவவழிபாடு வேண்டும். அச்சிவவழிபாட்டை ஏற்க அக்னி வழிபாடு அவசியம். அக்னி சிவனது நெற்றிக்கண்ணுமாயிற்று. எனவே, ஒளிதரு நெருப்பே பிரபஞ்சத்தின் மாட்சிமைக்கு உதவுமென்ற கொள்கை ஜகத் சிருஷ்டியோடு ஆரம்பமாயிற்று. அன்றிலிருந்து அக்னி வழிபாடும் அக்னியூடே இறைவனை நினைந்து கொள்ளவும், அவ்வாறு அக்னிசார்போடிணைந்த கிரியைகளின் மூலமாகக் கடவுட் தன்மையை உணரவும், உணர்ந்தது போல மனிதன் வாழ்வை வகுக்கவும் ஆரம்பித்தான். இந்த அக்னி வழிபாடு பல ரூபங்களில் பரவலாயிற்று. தொல்காப்பியம் எழுதப்படுவதற்கு முன்பே முத்தீ வணக்கமும் ஒருவகை வழிபாடாக இருந்தது. இவ்வழிபாடு பொதியமலையிலிருந்து இமயம்வரை பரவியிருந்த தென்பதை சேரமான் பெருஞ் சோற்றுதியர் சேரலாதனை, முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டில் பின் வருமாறு கூறுவதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

*'சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை*
*யந்தியத்தணரருங் கட னிறுக்கு*
*முத்தீ விளக்கிற் றுஞ்சும்*
*பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே'*

என முத்தீ உணர்த்தப்பட்டிருக்கிறது. (புறம் 2 ஆம் செய்யுள்)

இவ்வாறான சிவனை, சரியை, கிரியை, யோகம் ஞானம் மூலம் உணர்ந்து ஈர்த்து, அறிந்து அவனருள் பெறுவதற்கு தோன்றியதே சிவாகமங்களும் வேதங்களும் ஆகும். இவையே உண்மையான சைவநெறி மார்க்கங்களை உணர்த்தக்கூடியவை. வேதசிவாகமங்களை உணர்ந்துகொள்ள உதவுவதே இதிகாச புராணங்களும், தேவார திருவாசகங்களுமாகும். செவிவழி கற்ற கல்வி படிப்படியாக நூற்கல்வியாக மாறிற்று.

குருசிஷ்ய முறையில் வாழ்க்கையின் மேன்மைக்கும் புனிதத்திற்குமாகத் தொடர்ந்து வந்த வழமை காலஞ் செல்லச் செல்ல பள்ளியிற் பயிலும் வழக்கம் ஆரம்பமானது. அப்போது ஊதியம் பெறும் மார்க்கமாக இப்புனித ஆசார்ய சேவை உபாத்தியாயர் என்ற பட்டத்தோடு முன்னேறிற்று. பின் ஆசிரியர் என்றும் இப்போ மாஸ்டர் என்றும் கலியுக தர்மத்தின் சாயலில் சில பள்ளிக்கல்வி ஆபாசமாக முன்னேற்றங் காண்கிறது.

### இறைவனிடம் தீராத அன்பு தேவை

இறைவனிடத்து சார்தும் பேரன்பினால் பேரின்பம் பெறும் இந்த ஆத்மாவைத், தாங்கும் உடல்சரீரம் கூட சிவமார்க்கத் தோற்றங்களின் சாயல்களைக் கொண்டு இருதயஸ்தானத்தில் உயிராக இறைவன் வீற்றிருக்கிறார் எனபுருஷசூக்தம் கூட வெகு அழகாக எடுத்தோதுகிறது.

சரீரமானது தன்விரலின் தொண்ணூற்றாறு விரல் பிரமாணங்கொண்டது. நீளம் எண்சாண், பருமன் நாற்சாண். ரோமத்துவாரமோ மூன்றரைக் கோடி. நரம்பு நாடிகள் எழுபத்தீராயிரம். தொண்ணூற்றிரண்டு சாண் குடல். இவ்வாறாகக் கோர்த்துள்ள சரீரத்தில் ஒன்பது வாசல்களும் பத்துப் பொறிகளும் பத்துப் புலன்களும் ஆறு ஆதாரங்களும் மூன்று மண்டலங்களும் பத்து நாடிகளும், பத்து வாயுக்களும், எட்டுத் தாதுக்களும், ஐந்து தோசங்களும், நான்கு கரணங்களும், ஐந்து அவஸ்தைகளும், மூன்று குணங்களும், மூன்று மலங்களும், மூன்று வியாதிகளும் என்றவாறு தொண்ணூற்றாறு தத்துவங்களை அடக்கிவைத்திருக்கிறது. இந்த அடக்கங்கள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு, அவற்றில் ஒடுங்கி, ஈற்றில் இணைத்தும் உயிரான ஆத்மாவில் இணைத்துவிடும்.

பேரன்பினாலும் அறம்செய்த பலனாலும் பக்குவமடைந்த இறையருள் பெற்ற ஆன்மா யாவும் ஒடுங்கி தன்னில் இணைய, அந்த ஆத்மா இறைவனோடு கலந்து சாந்தி பெறுகிறது. சைவ சமயத்தின் பேருண்மை இதுவே. எனவே இக்கலியுகத்தில் அல்ல, எந்த யுகத்திலும் மனிதன் உயிர்வாழ்வதற்கென இலட்சியம் பேரின்பமடையவே என்பதற்கிணங்க, எங்கும் எதிலும் அன்புசெலுத்தி அரவணைக்கவேண்டும். இதற்கும்கூட இறைவனிடம் தீராத அன்பு செலுத்தி அவன்புகழ்பாடி, உண்மையாக சிவ பக்தனாக வாழ்வதிலேயே கவனஞ்செலுத்தவேண்டியது கடமை.

### பணிசெய்வதே மேலான கடன்

பணிசெய்வதே ஒருவனது மேலான கடன். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்றார் அப்பர் சுவாமிகள். இப்பணி எவ்வாறு அமையவேண்டுமெனக் கூறுமிடத்து 'சமய அறிவையும், இறைவனின் திருவிளையாடல்களையும் நீ முதலில், அறிந்து அவற்றை அன்போடு மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறு' என கட்டளையிடப்படுகிறது. இதுவோர் பெரும் தர்மமுமாகும். இதனையே உபநிஷதங்கள் கூட 'சத்யம்வத, தர்மம் சர' என ஆணித்தரமாக அறியத் தருகிறது. பிறப்பின் தோற்றத்தை வர்ணிக்கும் உபநிஷதுகள் எல்லாம்வல்ல பரமேஸ்வரன் பராபரத்தைப் படைத்து அதில்தான் தோன்ற, பரத்தில் சிவம்தோன்ற சிவத்தில் சக்திதோன்ற, சக்தியில்



மகாராஜ ஸ்ரீ.சு.து. ஷண்முகநாதக்குருக்கள்
ஆதீனகர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்.

நாதம் தோன்ற, நாதத்தில் விந்துவும், விந்துவில் சதா சிவமும், சதா சிவத்தில் மகேஸ்வரனும், மகேஸ்வரத்தில் ருத்ரனும், ருத்ரனில் விஷ்ணுவும், விஷ்ணுவில் பிரமனும், பிம்மாமூலம் ஆகாசமும், அதிலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதுவியும் தோன்றிற்று.

மீண்டும் பிருதுவியிலிருந்து அன்னம் தோன்ற அன்னத்திலிருந்து நர, மிருக பசுபக்ஷி ,தாவர சங்கமம் தோன்றின. இதுதான் தோற்றம். இந்தத் தோற்றங்கள் மீண்டும் வந்தவழி சென்று இறைவனிடத்திலேயே சேர்ந்துவிடுகிறது. இதைத்தான் இறைவனிடத்திலே பேரன்பு கொள்ளல் வேண்டுமென சகல சைவ சமய சாஸ்திரங்களும் புராணங்களும் திரும்பத் திரும்ப இத்தகவல்களைத் தந்துநிற்கின்றன.

உலகில் மக்களும் ஜீவராசிகளும் உயிர்வாழ்வதன் இலட்சியம் இன்பமடையவேண்டுமென்பதே. இந்த இன்பம் பேரன்பினால்தான் உண்டாகும். அதுவும் துன்பம் கலவாத பேரின்பத்தை ஜீவராசிகள் நாடிநிற்கும். அவ்வாறு வேண்டப்படும் பேரின்பத்தைப் பெற வேண்டின் என்றும் அழிவற்ற நித்யப்பொருளான இறைவனிடத்தே முதலில் நாம் அணுகி அவர்மேல் களங்கமற்ற பேரன்பை உண்டாக்கி அதன் வாயிலாக அனைத்து உயிர்களிடம் அன்பைப் பெருக்குதல் வேண்டும்.

*'ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்*
*எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு அன்பில்லார்'*

என்று சிவஞான சித்தியார் கூறுகிறது.

### சிவபூமியாய்ச் சிறப்புற வைத்தல் நம்கடன்

அன்புநெறியில் மனதை ஈர்த்துவிட வேண்டுமாயின் ஒளிநெறியில் மேன்மேற்சென்று ஒப்புரவாற்றி வாழுங்கள் எனச் சைவ சமயம் தூண்டுகிறது. 'எங்கும் பொங்குக இன்பமயம்' என்ற பெருவிருப்பம் சைவர்களிடமே இருக்கிறது. மாண்புமிகு சைவசமயத்தில் பிறந்தோருக்கே அன்பின் இனிமை துலங்கும். அன்புகூட அறத்தின் செயற்திறனால்தான் பெருகுமென நாயன்மார்கள் அனைவரும் எடுத்துக்காட்டியுள்ளனர். அறம் செய்ய விரும்பும்போது அவர் யார், இவர் யார் என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடாது எல்லாம் சிவம்; சிவத்திற்கே அறம் ஆற்றுகின்றோம் என்ற எண்ணங்கள் மலர வேண்டும். உற்றார், உறவினர் என்றதனைக்கூட அறம்செய்யும்போது கருத்திற்கொள்ளலாகாது. 'உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்குற்றார் ஆருளரோ' என அப்பர் சுவாமிகள் இறைவனல்லாது உற்றார் வேறு உளரோ எனத் தெரிவிக்கிறார்.

எனவே மாட்சிமைதரும் இம்மானுட வாழ்வை சிவபிரானிடமே சேர சைவர்கள் ஒவ்வொருவரும் ஆலயவழிபாடு, உற்சவபூசை, சிவதரிசனங்கள், தானதர்மங்கள், துதிசெய்தல் போன்றவற்றில் ஈடுபட்டு சூழலைப் புனிதப்படுத்தும்போது சிவபூமி சிவபூமியாகவே மலரும்.

## தவ மகிமை

சூரனாதியோர் நல்லொழுக்கங்களை அழித்து தேவர், முனிவர் முதலான உயர்ந்தோரை வருத்திய காலத்து, அசுரர்களை அழித்து வர்ணாச்சிரம தர்மங்களை உய்ப்பித்து உலகை ரட்சிக்குமாறு பன்னிரு படைகளையும் பரித்தனனாதலால் ''ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்'' என்றும், ''செந்நிறமுடைய வராய் ஞானத்தை ஊட்டும் வேள் - 'செவ்வேள்' எனவும், சிவசுப்பிரமணிய பரஞ்சுடர் துதிக்கப்படுகிறார். நோய், பகை முதலான தீமைகள் தொற்றாது, வீரம், அதிகாரம், கீர்த்தி என்பன பெற்று சிறந்து வாழ்தலை ''இனிதுமேவல்' எனக் கூறப்படுகிறது.

தாயின் கருவில் உருவாகிப் பிறப்பதும், பின் வளர்வதும், ஈற்றில் மூப்பெய்தி இறப்பதுந்தான் மனித வாழ்வின் இயல்பு. உலகில் அரிதான மனிதப் பிறவியெடுத்தும், அனுதினமும் அல்லல்களால் துன்பப்பட்டும், துயரங்களால் வாடியும் தத்தளிக்கும் மனிதர்களையே பெருமளவில் காணமுடிகிறது. பிறப்பு, பிணி, மூப்பு, மரணம் என்னும் சம்சாரங்களை நீக்கவும், இடைநிலை வாழ்வில் ஏற்படும் விபத்துகள், ஆபத்துக்கள் என்பவற்றிலிருந்து தப்பிக்கவும், சுகங்களை அனுபவிக்கவும் சுப்ரமண்யக் கடவுளை மனதிலிருத்தி, அப்பெருமானின் பூசைகள், உற்சவங்களைத் தரிசித்து, அவன் அருள்பெற முயல்வதே மனிதப் பிறவியின் சரியான மார்க்கம் என வேதசாஸ்திர புராணங்களை உணர்ந்த நாயன்மார்கள் கூறியுள்ளனர். இப்பிறவியில் மனிதன் மிக முக்கியமாக ஆற்ற வேண்டியவை சைவ நற்கருமங்களேயாகும். தர்மங்களைச் செய்வதால் அன்பு பெருகும்; அன்பு பெருகிய வழி அருள் தோன்றும்; அருள் மூலம் தவநிலை கிட்டும். இவற்றால் உள்ளம் தெளிவு பெறும். பிறவிப் பிணியும் அகலும். தொன்று தொட்டு ஆன்மாவைச் சார்ந்து நிற்கும் ஆகாமியம், பிராரத்வம், சஞ்சிதம் என்னும் மூவகைப் பிறவிக்கட்டுக்களும் அகலும். இவை நீங்கியதும் ஆன்மா பேரின்பத்தைச் சார்ந்துவிடும். இது வேத சாரமுடிவு.

எனவே மனிதம் பக்குவமடைய, இறையுணர்வோடு இறை வழிபாடுகளும், இவற்றுடன் அனுசரணையாகும் சிவதர்மங்களுமே துணைதரும். ஆராதனையும் இவற்றில் இணைய வேண்டியது அவசியம். எந்தவோர் செயலையும் மனம் வாக்கு காயங்களால் இறையுணர்வோடு ஆற்றுகிறோமோ அதுவே ஆராதனை எனப்படுகிறது. மனித வாழ்வுக் காலமோ சொற்பம். அதிலும் இளமைக் காலம் மிகக் குறுகியது. ருசியாக உண்பதும், இனிமையான கீதங்களைக் கேட்டு ரசிப்பதும், நல்வாசனைகளை நுகர்வதும், அழகுகளை ரசிப்பதும், மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது தவறில்லையெனில், இவையனைத்தையும் ஒருங்கே தரும் இறைவனது பூசைகள் மற்றும் மகோற்சவ தரிசனங்களைத் தரிசித்து தர்மங்களையாற்றி அல்லல்கள் நீங்க இறையுணர்வால் பெறும் மகிழ்ச்சி எத்தகைய பயன்களை நல்குமென நாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும். எனவே மனிதர்களை இத்தகைய நல்வழியில் வழிகாட்ட வேண்டிய பெரும் தர்மம் அந்தணரையும் அறிவுடையோரையும் சார்ந்ததே. இவ்வழியில் இத்தவச் செயற்பாடுகளை கந்தப் பெருமான் கோயில் கொண்ட மாவையாதீனம் துணிந்து அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துவருகிறது. அதற்கு சைவ மக்கள் உறுதுணையாகவிருந்து போதவு நல்கி முருகப் பெருமானின் அருட் கடாட்சத்திற்குப் பாத்திரமாகி நல்வாழ்வு வாழப் பிரார்த்திப்போமாக.

இ.பேரின்பநாயகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடத்திய விருது வழங்கும் நிகழ்வில் நீண்டகால சேவைக்கான தங்கப்பதக்க விருது பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

திருமதி அனுலா டி சில்வா, பி.பாலசிங்கம், எஸ்.சண்முகராஜா, லூயிஸ் பெனடிக்ட் ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# தமிழர்களின் எதிர்கால.........

[07ஆம் பக்கத் தொடர்ச்சி...]

3.3 யாழ்.பிரதேசங்களில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீளக் குடியமரவும், வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பவும், அவர்கள் தனித்துவம் மேம்படவும் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுதியளிக்கின்றது.

தமிழ் தேச மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நான்கு கட்சிகள் [அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு] இத்தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தில் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது.

இத்தனை காலமும் எம் மக்கள் செய்த தியாகங்கள் அவம் போக விடலாமா? அதற்குரிய பயன் எம் தமிழ் மக்களுக்கல்லவா கிடைக்கவேண்டும். எனவேதான் வீட்டுச் சின்னத்திற்கு எதிரே வாக்களித்து எமது அணியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுமாறு பணிவுடன் விண்ணப்பிக்கின்றோம்.

இந்தத் தேர்தலில் நாம் பெறும் வெற்றியானது உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்; தமிழ் மக்களின் எதிர்கால அரசியலிலும் பெரும் மாற்றத்தையும் திருப்பத்தையும் ஏற்படுத்தும் என அறுதியிட்டுக் கூறுகின்றோம். ★

## ஊற்றல் மயானத்தில் சிரமதானம்

நாவற்குழி,ஜூலை17

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையினால் கைதடி ஊற்றல் மயானம் சிரமதானம் மூலம் சீர்செய்யப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனையின் பொறுப்பதிகாரி சி. பத்மநாதன் தலைமையில் கடந்த 13ஆம் திகதி சிரமதானம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவான பொது மக்கள், பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி மயானத்தைச் சிரமதானம் மூலம் சீர்செய்தனர். (203-288)

## சிறுவர்களுக்கு உபகரணங்கள்

தெல்லிப்பழை,ஜூலை17

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, திடற்புலம் சிறுவர் கூடாரத்தைச் சேர்ந்த சிறார்களுக்கும் அச்செழு - போயிட்டி சிறுவர் கூடாரத்தைச் சேர்ந்த சிறார்களுக்கும் அவர்களின் உடல், உள வளர்ச்சி கருதி மூன்று லட்சம் ரூபா பெறுமதியான மைதான விளையாட்டு உபகரணங்கள் 'வேள்ட் விஷன்' நிறுவனத்தால் அண்மையில் வழங்கப்பட்டன.

சிறுவர்களின் நலன்கருதி தெரிவு செய்யப்படும் கிராமங்களில் ''சிறுவர் கூடாரம்'' என்ற அமைப்பை ஏற்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கான செயற்றிட்டங்களை 'வேள்ட் விஷன்' நிறுவனம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-150)

## ஆன்மீக நிகழ்வு

இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையங்களின் ஏற்பாட்டில் 'நல்லாசிகளும் தூய உணர்வுகளும்' நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (201)

## கூட்டங்கள்

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக்கூட்டமும் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (204)


## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி பிள்ளையினான் (ஐயாத்துரை)



தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.87, சந்தன மாதா கோயில் வீதி, சுண்டுக்குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி பிள்ளையினான் 15.07.2009 புதன்கிழமை இரவு கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் (ஐயாத்துரை என்று அன்பாக அழைக்கப்படும்) சின்னப்பு பிள்ளையினானின் அன்பு மனைவியும் ரஞ்சினிதேவி, திருமதி சிவத்திரை சிவநாதன் (அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திலகவதி, நடேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

இல.87, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

சிவநாதன் (மருமகன்)

திருமதி சிவத்திரை சிவநாதன் [மகள் - அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி].

(87082)

## ஈரவிழிகளுடன் நான்காம் ஆண்டு நினைவுப் பூக்கள் சமர்ப்பணம்

### திருமதி முத்துலிங்கம் இராசலட்சுமி (சுந்தரக்கா)



மண்ணில் 11.05.1941

விண்ணில் 17.07.2005

திதி: ஏகாதசி

சந்திரன் இல்லாத வானம்
தாமரை இல்லாப் பொய்கை
தந்திகள் இல்லா வீணை
மந்திரி இல்லா வேந்தன்
மதகரி இல்லா சேனை
சுந்தரப்புலவன் இல்லா தொல்சபை
இவை யாவும் போல "அம்மா"
'நீங்கள் இல்லாத எம் இல்லம்
பொலிவிழந்து'' நாலாண்டாச்சே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி/559596)

அம்பனை மேற்கு, சுன்னாகம்.

பிள்ளைகள்.


# மக்களின் வாழ்வாதாரப்....

[07ஆம் பக்கத் தொடர்ச்சி...]

★ வன்னி மண்ணில் இருந்து பல்வேறு துன்ப, துயரங்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்து வவுனியாவிலும், யாழ்.குடாநாட்டிலும் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் எமது உறவுகளுக்கான உடனடி நிவாரணப் பணிகள் துரிதப்படுத்தப்படவேண்டும்!

★ இடம்பெயர்ந்த எமது மக்களை விரைவாக அவர்களது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியேற்றம் செய்து, அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் உடன் வழங்க வேண்டும்!

★ எமது மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை சரிவரச் செய்துமுடிக்க வேண்டும்!

★ சரணடைந்திருக்கும் எமது மக்களின் பிள்ளைகளான புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, அவர்கள் கல்வியைத் தொடரவும், அவர்களுக்கு தொழில்வாய்ப்புகள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

★ அழிந்து, சிதைந்திருக்கும் எமது வரலாற்று வாழ்விடங்களை மறுபடியும் ஓர் அழகிய தேசமாக அபிவிருத்தியால் தூக்கி நிறுத்த வேண்டும்.

★ எமது மக்கள் சுதந்திரமாக நடமாடவும், சுதந்திரமாக எங்கும் தொழில் செய்யவும், சுதந்திரமாக எதையும் பேசவும், எழுதவும் எமது மக்களுக்கு முன்னால் உள்ள தடைகள் யாவும் நீக்கப்படவேண்டும்.

★ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து, மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதை எமது இறுதி இலக்கு நோக்கி நகர்த்தி முன் செல்லவேண்டும்.

★ கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. வடக்கிலும் நேர்மையான ஒரு தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகளிடம் அது ஒப்படைக்கப்பட்டு அந்த முயற்சியை முன்னோக்கிக்கொண்டு செல்லவேண்டும்.

அன்பார்ந்த எம் மக்களே!....

எமக்கு முன்பாக விரிந்து கிடக்கும் இந்த வரலாற்றுப் பணிகளை யாரால் நிறைவேற்ற முடியும் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும்?..... அரசாங்கமே இதைச் செய்துமுடிக்க முடியும். வேறு எவராலும் தனித்து நின்று ஆற்றமுடியாத இந்தப் பணிகளை நாம் அரசாங்கத்துடன் இணைந்து நின்றே ஆற்றமுடியும்!

இது குறித்து நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் தொடர்ச்சியாக நடத்தி வந்த பேச்சுகளின்போது அதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டு உடன்பாடும் காணப்பட்டிருக்கின்றது.

இந்த உடன்பாட்டின் அடிப்படையில் ஈ.பி.டி.பியினராகிய நாம் எமது மக்களின் விருப்பங்களை ஏற்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு இணங்கியிருக்கின்றோம்.

இதேவேளை ஈ.பி.டி.பியினராகிய நாம் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரேயொரு தனித்துவமான அரசியல் கட்சி என்ற ரீதியில் எமது தனித்துவங்களோடு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போடு தோழமைக் கட்சியாக இணைந்து எமது மக்களின் இலட்சியக் கனவுகளை விரைவாகவும், இலகுவாகவும் எட்டுவதற்காக இந்தத் தீர்மானத்தை ஒரு பரீட்சார்த்த முயற்சியாக எடுத்திருக்கின்றோம்!

உங்கள் எண்ணத்தில் இருக்கும் சின்னம் வீணையாக இருப்பினும்! எதிர்வரும் தேர்தலில் வெற்றிலைக்கு வாக்களிப்பதே உங்கள் ஆணையாக இருக்கட்டும்!!

நாளை வெற்றியைத் தரப்போகும் இந்த வெற்றிலைச் சின்னத்தில் இணைந்திருக்கும் கட்சிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருந்தாலும், குறித்த இலக்கை அடையவேண்டும் என்ற பொதுநோக்கில் ஒன்று திரண்டு நிற்கின்றன.

நாங்கள் ஆள்வதற்காக அல்ல! மக்களாகிய நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்காகவே வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் தீர்மானத்தை நாம் ஏற்றிருக்கின்றோம்!

மகிழ்ச்சி தரும் மாற்றங்களையே நாம் விரும்புகின்றோம். இதில் ஏமாற்றங்கள் நிகழுமாயின் அதற்கான அனைத்து பொறுப்பையும் நாமே ஏற்றுக்கொண்டு எமது தீர்மானங்களைத் திருத்தி எழுதவும் நாம் என்றும் தயாராக இருப்போம்! ஆனாலும் நாம் எடுத்திருக்கும் இந்தத் தீர்மானம் ஒருபோதும் தோற்றுப்போகாது!...

எமக்குத் தேவை அடையவேண்டிய இலக்கு ஒன்றுதான்!... அதற்குத் தேவை நடைமுறைச்சாத்தியமான எமது வழிமுறை மட்டுமே!!... நடைமுறைச் சாத்தியமான இந்த வழிமுறையைத்தான் குறுகிய சுயலாப நோக்குடையவர்கள் எதிர்த்து நின்று எம் மீது சேற்றை வாரித் தூற்றி வருகின்றனர். ஆனாலும் போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்! நாம் செல்லும் பயணம் நேர்வழி ஆகட்டும்.

எம்மைத் தூற்றுபவர்கள் எமது மக்களாகிய உங்களுக்கு சோற்றையும் கொடுக்கவில்லை. சுதந்திரத்தையும் கொடுக்கவில்லை! சோறும் தேவை! சுதந்திரமும் தேவை! இதுவே எங்கள் இலக்கு!

துப்பாக்கிகள் துருப்பிடிக்கட்டும்!... ஆயுத கலாசாரம் அழிந்து போகட்டும்!! ஜனநாயக மயப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் தேசமாக எமது வரலாற்று வாழ்விடங்களை மாற்றியமைப்போம்.

தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!
என்றும் நாம் மக்களுக்காக!
மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! ★


## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி செல்வவிநாயகம்



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி செல்வவிநாயகம் 15.07.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசாமி - இராசரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் செல்வவிநாயகத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், அமெரிக்கமிஷன் கல்லூரி, உடுப்பிட்டி, இளைப்பாறிய அதிபர் - சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை) அன்பு மனைவியும் சாந்தினி, அருந்ததி, சிவகுமாரன் (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்குளி), மனோகரன் (ஆசிரியர்- ஹோமாகம தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயவீரசிகாமணி, பிரகாசன், தாட்சாயினி (ஆசிரியை - இராமநாதன் இந்து மகளிர் வித்தியாலயம், பம்பலப்பிட்டி), பவானி ஆகியோரின் அன்பு மாமியும் சிவஞானசுந்தரம் (அவுஸ்திரேலியா), சிவபாதசுந்தரம் (இங்கிலாந்து), இராஜேஸ்வரி (கனடா), ஞானசௌந்தரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிரகதீஸ், அமுதீசன், அமிர்த பாசினி, ரேணுலக்சுமி, சுவஸ்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2009) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.4 மணிக்குத் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சாந்தம், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

கோ.செல்வவிநாயகம் (கணவர்).

தொடர்பு: 060 221 2921, 060 221 6437

(87085)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

பகுதி 11

நேரம் : 1 மணி 15 நிமிடம்
100 புள்ளிகள்

100

## எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

■ கீழ்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.


அழகிய மலைத்தொடர்களின் கீழே அமைந்துள்ள சமவெளி அது. பல நிறப் பூக்கள் நிரம்பி வழிந்து பார்ப்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்வது. மலர்களின் நறுமணத்தால் சுற்றுச் சூழலே நறுமணம் கமழ்கிறது. அந்த சமவெளியிலிருந்து பாய்ந்து செல்கிறது வெள்ளி நிறத்திலானதொரு நீர்வீழ்ச்சி. துள்ளிப்பாய்ந்து செல்லும் அது சிலவேளை பெருந் திரளாய் புன்னகைக்கின்றது. பல நூறு அடிகள் பள்ளத்தை நோக்கி ஒரேயடியாக பாய்ந்து வருவதால் மனமகிழ்வைத் தருகின்றது. இந்த நீர்வீழ்ச்சி எது என உங்கள் உள்ளம் கேள்வியெழுப்புகிறதா? அதுதான் உள்ளத்தை ஈர்க்கும் தியலும நீர்வீழ்ச்சி.

தியலும நீர்வீழ்ச்சி இயற்கை அன்னையின் அற்புதப் படைப்புகளில் ஒன்று. அதனைக் காண்போர் உள்ளம் அதனில் பறிபோகின்றது. ஈழ மாதாவை மெருகூட்டும் அற்புதப் படைப்புக்களில் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி தியலும நீர்வீழ்ச்சியல்ல. ஆயினும், அது அழகில் வேறு எதற்கும் சளைத்ததுமல்ல.

1. மேலுள்ள பந்திகளில் எதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது? ..................
2. இதைக் காண்போர் மனம் மகிழ்வது ஏன்? ..................
3. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.
   அ) துள்ளிப் பாய்ந்து ..................
   ஆ) கேள்வியெழுப்புகிறதா ..................
4. சுற்றுச் சூழல் எதனால் மணம் கமழ்ந்தது? ..................
5. கொள்ளை கொள்கிறது' என்பதன் பொருள் யாது? ..................
6. தாய்' என்பதற்குரிய ஒத்தசொல்லொன்றை எழுதுக. ..................
7. மலைத்தொடர்கள்' எனும் சொல்லின் ஒருமை வடிவத்தை எழுதுக. ..................
8. புன்னகைக்கின்றது' என்பது எக்காலத்திற்குரியது? ..................
9. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அஃறிணைப் பன்மைச் சொற்கள் இரண்டு எழுதுக..................
10. மலையும் மலை சார்ந்த நிலமும் (ஒருமொழியில்) எவ்வாறு அழைக்கப்படும். ..................

(20 புள்ளிகள்)

■ கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடை எழுதுக.

11. 24 728 என்பதை எழுத்துக்களில் எழுதுக. ..................
12. 25, 28, 33, 40, 49, ............இந்த அமைப்பினைக் கொண்டு அடுத்த இலக்கத்தை எழுதுக. ..............
13.  இவ்வாறான 6 உருவங்களை உபயோகித்து உருவாக்க முடியுமான உருவம் என்ன? ..................
14. 5 கிலோ மீற்றர் 5 மீற்றர் என்பதை சர்வதேச நியம அலகில் எழுதுக. ..................

(4 புள்ளிகள்)

■ கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய (தமிழ்) பொருளை எழுதுக.

15. Aeroplane .................. 16. Driver ..................
17. Airport .................. 18. Brinjal ..................

(4 புள்ளிகள்)

■ கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்கள உச்சரிப்புச் சொற்களை தமிழில் எழுதுக.

19. பேனா .................. 20. புத்தகம் ..................
21. கதிரை ..................

(6 புள்ளிகள்)

■ கீழ்வரும் சிங்களச் சொற்களுக்குரிய (தமிழ்) பொருளை எழுதுக.

22. குருதுமா ..................
23. விதுஹல்பதி ..................
24. ஒரலோஸுவ ..................

6 புள்ளிகள்)

■ கீழுள்ளவை சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

25. காகம் ஏதேனும் உணவைக் கண்டால், கத்திக்கொண்டு தன் இனத்தை அழைக்கும். ( )
26. வௌவால் இரவில் பறந்துதிரியும் பறவையாகும். ( )
27. தவளை வாழ்க்கை வட்டமற்ற ஓர் உயிரினமாகும். ( )
28. செண்பகம் விவசாயிக்கு மிகவும் பிடித்தமான ஒரு பறவையாகும். ( )
29. நுளம்பினால் உருவாகும் நோயொன்று மலேரியா. ( )
30. ஒவ்வொருவரும் ஆரோக்கியம் கருதி, சீப்பு, பற்தூரிகை போன்றவற்றை தனியாக உபயோகிக்க வேண்டும். ( )

(6 புள்ளிகள்)


■ கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

31. வானவில் .................. 32. கபில நிறம் ..................
33. வண்ணத்துப்பூச்சி .................. 34. அன்னாசிப்பழம் ..................

(4 புள்ளிகள்)

■ கீழ்வரும் வினாக்களுக்குச் சரியான விடை எழுதுக.

35. கீழுள்ள பூவின் பகுதிகளை சரியாக எழுதுக.




A ..................
B ..................
C ..................
D ..................

(4 புள்ளிகள்)

36. மரமொன்று நன்கு வளர முக்கியமாகத் தேவையானவை எவை?
.................. ..................
37. வாழ்க்கை வட்டத்தினையுடைய இரண்டு உயிரினங்களின் பெயர்களை எழுதுக.
.................. ..................
38. மகரந்தச் சேர்க்கைக்காக உதவக்கூடிய இரு உயிரினங்களின் பெயர்களை எழுதுக.
.................. ..................
39. கீழ்வரும் உபகரணங்களின் பெயர்களைச் சரியாக எழுதுக.

 i) ..................

 ii)..................

40. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது? பெரிய குளம் எது?
i) உயரமான நீர்வீழ்ச்சி ..................
ii) பெரிய குளம் ..................
41. கீழுள்ள வீதிச் சமிக்ஞைகளின் மூலம் தெளிவுபடுத்தப்படுபவை யாவை?






i) .................. ii) ..................

42. காற்றின் உதவியுடன் இசைக்கக்கூடிய இரு இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.
i) .................. ii) ..................

(14 புள்ளிகள்)

■ கீழ்வரும் வினாக்களுக்குச் சரியான விடை எழுதுக.

43. எலி வளையானாலும் ..................' இப் பழமொழியைப் பூர்த்திசெய்து மீள எழுதுக.
..................
44. அரச மனைகளில் பெண்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள தனியிடம்' தொடர்மொழிக்கு ஒருமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?
..................
45. 'ம.ப.பா' எனும் சுருக்கக் குறியீட்டினை விளக்கமாக எழுதுக.
..................
46. 'புத்திரன்' எனும் சொல்லின் பெண்பால் வடிவத்தை எழுதுக.
..................

(4 புள்ளிகள்)

■ கீழ்வரும் சிட்டையைப் பூர்த்திசெய்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

| | பொருள் | அலகின் விலை | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | சதம் |
| 47. | அரிசி | 1kg ரூ. 70.00 | 3 kg. | ............ | ............ |
| 48. | பருப்பு | 1kg ரூ. 170.00 | 500 g | ............ | ............ |
| 49. | சீனி | 1kg ரூ. 80.00 | 1.5 kg | ............ | ............ |
| 50. | மா | 1kg ரூ. 72.00 | 2 kg | ............ | ............ |
| 51. | கருவாடு | 1kg ரூ. 280.00 | 250 g | ............ | ............ |
| 52. | தேங்காயெண்ணெய் | 1*l* ரூ. 120.00 | 500 *ml* | ............ | ............ |
| | | | 53. | ............ | ............ |

54. மேலுள்ள சிட்டைக்கான தொகையைச் செலுத்த கடை முதலாளிக்கு ரூபா 1000 கொடுக்கப்பட்டது. மீதியாக எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. ..................

(16 புள்ளிகள்)

■ 'எனது தாய்நாடு' எனும் தலைப்பில் நான்கு சொற்களுக்குக் குறையாத, எழுவாய், பயனிலை சரியாக அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக.

55. ..................
56. ..................
57. ..................
58. ..................
59. ..................
60. ..................

(12 புள்ளிகள்)

இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 05 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

### முன்னோடிப் பரீட்சை 4 - i வினாத்தாளுக்கான விடைக் குறிப்புக்கள்

1. ii 2. iii 3. u - m - j 4. அமர(ன்) 5. 24 6. D 7. E 8. A 9. F 10. iv 11. நாம் மழலைகள் 12. எதிலும் பேதம் காணாப் பறவைகள் 13. நட்சத்திரம், சூரியன் 14. Rainbow 15. i) மழலைகள் ii) மகிழ்வோம் iii) பறவை iv) விண் 16. ii 17. ii 18. iii 19. iii 20. பன்றி, எலி, நுளம்பு 21. கறுவா, இஞ்சி, வேம்பு 22. பன்றி, எலி, இஞ்சி 23. கோ, நா, மா 24. மா, பலா, வாழை 25. மா, நா, கோ 26. வழிந்தோடியது 27. செய்தார் 28. தொடங்கின 29. i) மத்திய மகா வித்தியாலயம் ii) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் iii) கிறிஸ்துக்குப் பின் 30. iii 31. iii 32. ii 33. i 34. i 35. iv 36. Mountain (மலை) 37. River (ஆறு) 38. Sky (வானம்) 39. Bird (பறவை) 40. Tree (மரம்)

நன்றி: ஸத்தர, லக்விந்து, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ.

தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -
இஸ்மாயில் எம். பைரூஸ் (கொழும்பு)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 071-6850005 / 071-4273035

பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புடனும் மேலதிக சேர்க்கையுடனும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்ட ஆயர் எமிலியானுஸ்பிள்ளை



**யாழ்.மறை மாவட்டத்தின் புகழ்பூத்த முன்னாள் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

முன்னாள் யாழ்.ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை இவ்வுலகை விட்டு மறைந்து 37 ஆண்டுகள் சென்றாலும் அவர் கத்தோலிக்கத் திருச்சபையின் வளர்ச்சிக்கும் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கும் அயராது உழைத்தார் என்பதை மறக்கமுடியாது.

யாழ்.மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச ஆயரும் இலங்கையின் முதல் தமிழ் ஆயருமான எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை 1901ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி பிறந்தார். ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த ஆயர் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரி என்பனவற்றில் கற்றுப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பட்டதரியானார்.

கொழும்பு சென்.யோசப் கல்லூரி அதிபர் வண.பிதா பீற்றர்பிள்ளை, சென். பெனடிக்ற் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் லூக் இவரது சகோதரர்கள்.

சகோதரர்களைப் போல தானும் இறைவனுக்குப் பணி செய்ய விரும்பி பட்டதாரியான பின்னர் பதவிகளைத் துறந்து குருமடத்தில் சேர்ந்தார். கணித மேதை சி.சுந்தரலிங்கத்தின் மாணவனான இவரை குருமடத்தில் சேராது தடுக்க அவரின் தந்தை பேராசிரியரிடம் முறையிட்டார்.

உமது மகனை இறைவன் அழைக்கின்றார். அவன் வழியில் விடுங்கள். அவன் உயர்ந்த நிலைக்கு வருவான் என்று பேராசிரியர் பதிலளித்து தந்தைக்கு ஆறுதல் கூறினார்.

1924 ஜூலை 20இல் ரோமாபுரியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு நாடு திரும்பிய இளம் குருவான எமிலியானுஸ்பிள்ளை மறைமாவட்டத்தில் பணி செய்தார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் சிறிது காலம் அதிபராக நியமிக்கப்பட்டார். கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர், ஆயர் இல்லச் செயலாளர், கத்தோலிக்க பாடசாலைகளின் அதிபர் போன்றபதவிகளை இவர் வகித்தார்.

யாழ்.மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற ஆயர்எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை 23 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய முதலாவது சுதேசிய நல்லாயன் ஆவார்.

1961ஆம் ஆண்டு அன்றைய சுதந்திரக் கட்சி அரசு கத்தோலிக்கப் பாடசாலைகளை சுவீகரித்தபோது ஆயர்எமிலியானுஸ்பிள்ளை மனம் வருந்தினார். கத்தோலிக்க மக்களும், ஏனைய ஆயர்களும் எதிர்த்து நின்றபோதிலும் அரசு பாடசாலைகளை சுவீகரித்தது. பாடசாலைகளை எதிர்காலத்தில் அரசு நடத்த முடியாமல் திண்டாடும். பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் என்று ஆயர் எமிலியானுஸ்பிள்ளை தீர்க்கதரிசனமாக அன்று கருத்து வெளியிட்டிருந்தார். அதேபோல இன்று கல்வித் துறையில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. பல்கலைக்கழகங்களில் மோதல், ஆசிரியர் போராட்டம் என்று எல்லாம் நடைபெறுகின்றன.

மடுமாதாவில் மிகுந்த பக்தி கொண்டிருந்த அவர் மடுத்திருப்பதியை பக்தர்களின் வசதி கருதி அபிவிருத்தி செய்தார். அன்று இலங்கையிலிருந்த ஐந்து ஆயர்களுடன் இணைந்து கத்தோலிக்க சமயம் வளர உழைத்தார்.

1972ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி திடீர் சுகயீனம் காரணமாக எமிலியானுஸ்பிள்ளை கொழும்பில் காலமானார். ஆயரின் பூதவுடல் கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் பேராலயதில் வைக்கப்பட்டபோது அன்றைய ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ மற்றும் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். ஆயரின் பூதவுடல் யாழ்.மரியன்னை பேராலயதில் வைக்கப்பட்ட போதும் இன, மத பேதமின்றி மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். இறுதிச் சடங்கில் அன்றைய பிரதம நீதியரசர் எச்.என்.ஜி.பெர்னாண்டோ, அமைச்சர்கள் செ.குமாரசூரியர், கே.பி.இரத்தி நாயக்கா, ஆர்.எஸ்.பெரேரா உட்படப் பலர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மறைமாவட்டத்துடன் மன்னார் மறைமாவட்டம் இணைக்கப்பட்டிருந்ததால் மன்னார் மறை மாவட்ட மக்களும் ஆயரை மறக்க மாட்டார்கள். வன்னிப் பகுதியில் பல பாடசாலைகள், தேவாலயங்களை ஆயர் கட்டுவித்தார். வன்னிப் பகுதி மாணவர்கள் இன்று பல்கலைக்கழகம் வரையான கல்வியைப் பெற்றுக்கொள்ள மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளையும் ஒரு காரணம் எனக் கூறலாம். ✱



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவின்போது சுவாமி தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேர் வீதி வலம் வருவதையும் படங்களில் காணலாம்.



கல்வளை வீதி, சண்டிலிப்பாயில் உள்ள காளி அம்பாள் ஆலயத்தின் 5ஆம் திருவிழா அன்று வட்டு.மேற்கைச் சேர்ந்த 9 வயது இளம் தவில்வித்துவான் ''இளம் லயஞான குபேரபூபதி'' செல்வன் இராமநாதன் சிவசாகித்தியனுக்கு பொன்னாடை போர்த்தி ''சேய் இளம் தவில் சுடர்'' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

ஆலய பிரதமகுரு இராமச்சந்திரக் குருக்கள் சிவசாகித்தியனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், சைவப் புலவர் நித்திய தசீதரன் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: [illegible])

# பல்வேறு துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த உதவிய கண்காட்சி

குருநகர், ஜூலை 17

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி பல்வேறு துறைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு கண்காட்சியாக இருந்தது.

ஆரம்ப நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. இராதகிருஷ்ணன், பிரதம விருந்தினர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் மங்கள விளகேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இக்கண்காட்சியில் கோண்சோயா மாவினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், பனம் பொருள்களினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், வீட்டுத்தோட்டம், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஆகியவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் இந்த உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகள், காலம் கடந்த உணவுப் பொருள்களை உண்பதனால் உருவாகும் தீங்குகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டன.

வளரும் குழந்தைகளுக்கு தாய்ப் பாலின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இக்கண்காட்சியைப் பார்க்க வந்திருந்த தாய்மார்களுக்கு கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கம் வழங்கப்பட்டன.

அத்துடன் சாந்திகம் உளவளத்துணை அமைப்பினால் போதைப் பொருள்பாவனை, சிகரெட், தேநீர், கோப்பிவகைகள் அளவுக்கு மீறிப் பாவிப்பதனால் உருவாகும் தீமைகள், அவைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிகள், பிள்ளைகளை எவ்வாறு இக்கால சூழ்நிலையில் கவனமாக அன்பாக வளர்க்க வேண்டும். பிள்ளைகள் வளரும் போது அவர்களுக்கு வழங்கவேண்டிய சுதந்திரங்கள், ஆலோசனைகள் என்பவை தொடர்பான விளக்கப்படங்களுடன் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இரத்த அழுக்க நோய், சோடிஸ் குடிதண்ணீர்ப் பாவனையின் பயன்பாடு பற்றியும் வீடியோ படக்காட்சிகள் மூலம் பொதுமக்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன.

சுகாதாரத் தொண்டர்களின் போஷாக்கு சம்பந்தமான விழிப்புணர்வு பற்றிய தனி நடனம், கோலாட்ட நிகழ்ச்சி, வில்லுப் பாட்டு, நோய் பற்றியும் அது தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் பற்றிய நேர்காணல் ஆகியவைகள் இடம்பெற்றன. இக்கண்காட்சியில் தாய்மார், இளைஞர்கள் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(203-51)

# தேடி நலம் தரும் ஆடிப்பிறப்பு

''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே''

என்பது நவாலியூர் சோமசுந்தரப் புதல்வரின் பாடல். ஆடிப்பிறப்பின் பெருமையை அதன் தன்மையை, முறைமையை எடுத்துக் கூறும் பாடலாக இது அமைவதைக் காணலாம்.

ஆடிமாதம் முதல் தை மாதம்வரை சூரியன் தென்திசை நோக்கி நகர்வதால் அக்காலம் தெட்சணாயனம் எனவும் தை மாதம் முதல் ஆனி மாத முடிவுவரை சூரியன் வடதிசை நோக்கி நகர்வது அக்காலம் உத்தராயணம் எனவும் கூறுவர்.

தெட்சணாயன காலங்களில் சீதோஷ்ண காலநிலை மாற்றங்களால் பலவித நோய்கள் ஏற்படக்கூடிய தன்மையுண்டாகிறது.

பொதுவாக இந்துப் பண்டிகைகள், விரதங்கள் யாவும் மக்கள் கலாசாரத்தையும், பாரம்பரிய முறைகளையும், அதன் மூலம் ஏற்படும் சுகநலவாழ்வையும் எடுத்தியம்புகின்றன. ''சுகாதாரமே சமயம்- சமயமே சுகாதாரம்'' என்ற கோட்பாடு தற்காலத்தில் குறைந்து வருவது காணப்படக்கூடியதாகவுள்ளது.

**ஞானக்கதிர்**

ஆடிப்பிறப்புடன் தெட்சணாயன விரதங்கள் ஆரம்பமாகின்றன. ஆடிமாதப் பிறப்பன்று உணவு வகையிலே ஆடிக் கூழைச் செய்து, தமது குலதெய்வத்திற்கு படைத்து கொழுக்கட்டையை விநாயகருக்குப் படைத்து வழிபாடாற்றி உற்றார், உறவினர்களுக்கு அளித்து தாமும் உண்டு மகிழ்வர். இல்லத்திலே தீபமேற்றி

''குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியியே
குத்து விளக்கு கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே''

என நவாலியூர் புலவர் கூறுகின்றார். ஆடி மாதத்திலே பூரநட்சத்திரத்தில் முழுமுதற்தெய்வமாகிய இறைவியின் சாமத்திய சடங்கான பூரகர்மாவும் நடைபெறும். இதனால் அம்பாள் அனுக்கிரகமும் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று பூரண ஆயுளுடன் சுமங்கலிகள், கன்னிப்பெண்கள் நலம் அடைவர். அவர்களுக்குத் திருமாங்கல்யப் பலன் ஏற்படும்.

ஆடிச்செவ்வாய்க்கிழமைகளில் துர்க்காதேவி விழிபாடு சிறப்புடையது. இராகு, கேது, செவ்வாய் தோஷம் நீங்கப்பெறும். கன்னிப்பெண்கள் நோற்பதன் மூலம் விவாகப் பேறடையச் சாத்தியமுண்டு.

ஆடி பதினெட்டாம் நாள் கள்ளழகர் காவிரிநதியில் இறங்கிய புனித நாளை தமிழகத்தில் இன்றும் கொண்டாடுவர். ஆடி அல்லது ஆவணிப் பௌர்ணமியில் வரலட்சுமி விரதத்தைக் கொண்டாடுவர். இந்த நோன்பின் மூலம் திருமணப்பேறு, ஆயுள், சந்தானம் கிட்டும்.


பிதிர்களுக்கு தர்ப்பணம் செய்து அவர்களின் ஆசிகளை பெறுவதும் ஆடி அமாவாசை நாளில் என்பர். இதனால் நமது வளரும் சமுதாயம் நற்பேறடையும் என்பது சமயம் கூறும் நம்பிக்கையாகும்.

சிவஸ்ரீ சோ.இ.ரிரணதார்த்திஹரக் குருக்கள்,
ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் கோயில்,
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய விமான விபத்தில் 168 பேர் பலி: இரு கறுப்புப் பெட்டிகள் கண்டுபிடிப்பு

## அடையாளம் காணமுடியாதவாறு அவயவங்கள் சிதைவு



தெஹ்ரான், ஜூலை 17

வட ஈரானில் விபத்துக்குள்ளான விமானத்தின் இரு கறுப்புப் பெட்டிகள் சேதமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ் விமானத்தில் பயணித்த 168 பேரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இப்பயணிகள் விமானம் கஸ்பியன் விமானச் சேவை நிறுவனத்துக்குச் சொந்தமானதாகும் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கஸ்வின் மாகாணத்திலுள்ள விசாலமான பண்ணை நிலப்பரப்பில் இவ்விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது. சிதைந்த மனித அவயவங்களும், விமானச் சிதைவுகளும் பரவலாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

ஈரானின் தலைநகரான தெஹ்ரானிலுள்ள இமாம் கொமெய்னி சர்வதேச விமான நிலையத்திலிருந்து இவ்விமானம் ஆர்மேனியாவின் தலைநகரான இரிவானை நோக்கி புறப்பட்டது. எனினும், புறப்பட்ட 16 நிமிடங்களுக்குப் பின்னர், விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் அதிகாரிகள் கூறினார்கள்.

இவ்விபத்தில் விமானத்திலிருந்த 168 பேரும் பலியாகியுள்ளனர். இவர்களில் 153 பயணிகளும், 15 சிப்பந்திகளும் அடங்குவர். இவர்களில் பெரும்பாலானோர் ஆர்மேனியர்களும், ஜோர்ஜியர்களுமாவர். இவ்விமானம் புறப்படுவதற்கு முன்னர், எந்தவித கோளாறுகளும் பதிவாகவில்லை என்றும் அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்கள்.

இவ்விமான விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு, ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

''நாங்கள் அதிர்ஷ்டவசமாக இரண்டு தகவல் பதிவு கருவிகளை மீட்டுள்ளோம். இதற்காக கடவுளுக்கு நன்றி கூறவேண்டும். இவற்றின் மூலம் விபத்துக்கான காரணத்தை ஒருவாறு கண்டுபிடித்துவிடலாம்'' என விசாரணைக் குழுத் தலைவர் பார்சி மஜிடி, எசோசியேட்டட் பிரஸ் தொலைக்காட்சி செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''இவை பழுதுபட்ட நிலையில் உள்ளன. எனினும், இவற்றிலிருந்து ஒருவாறு, ஓரளவேனும் தகவல்களை எம்மால் திரட்ட இயலும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''இவ்விமானத்தின் முகப் பகுதி நிலத்தில் குத்தியதும் பயங்கர ஓசையுடன் அது வெடித்தது. அதன் தாக்கம் ஒரு பூகம்பத்தைப் போல நிலத்தை உலுக்கியது. அப்பகுதியிலிருந்து கரும்புகை மண்டலங்கள் தீச்சுவாலைகளுடன் எழுந்தன'' என அலி அக்பர் ஹஸ்மி என்பவர் ஏ.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''அநேக பயணிகளின் தலைகள், விரல்கள், கடவுச்சீட்டுகள் ஆகியவற்றையும் நாம் கண்டோம். அவயவங்கள் சிதைந்து கிடந்தன. உருக்குலைந்த முண்டங்களும் கிடந்தன. அடையாளங் காணக்கூடிய அளவுக்கு அவை இல்லை'' என முஸ்தபா பபாஷாஹ்வேர்டி என்பவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

## காற்சட்டை அணிந்துவந்த பெண்களுக்கு சாட்டை அடி!

காட்டூம், ஜூலை 17

காற்சட்டைகளை அணிந்த குற்றத்திற்காக சூடானில் பல பெண்களுக்குச் சாட்டை அடி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அநாகரிகமாக உடையணிந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த பெண்களை சூடானிய பொலிஸார் கைது செய்து தண்டனை வழங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


சூடானைச் சேர்ந்த முன்னணி பெண் ஊடகவியலாளர் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட சில பெண்களுக்கு அதே இடத்தில் பத்து சாட்டை அடிகள் வழங்கப்பட்டன. ஏனையவர்களை பொலிஸார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சூடானின் தலைநகர் கார்ட்டூமில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சூடானின் தலைநகர் உள்ளிட்ட சில பகுதிகளில் இஸ்லாமிய ஷரி-ஆ சட்டம் நடைமுறையில் உள்ளது.

அநாகரிகமாக உடையணியும் பெண்களுக்கு இச்சட்டத்தின் அடிப்படையில் 40 சாட்டை அடிகள் வழங்கப்படுகின்றன.

முஸ்லிம் அல்லாதோருக்கும் இதே சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட பெண் ஊடகவியலாளர் உள்ளிட்ட சிலர் சட்டத்தின் உதவியை நாடியுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது.




எகிப்தில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள்.

# சர்வதேச விண்வெளிக் கூடத்துக்கு 'எண்டுவர்' விண்கலம் பறந்தது



வாஷிங்ரன், ஜூலை 17

அமெரிக்க 'எண்டுவர்' விண்கலம் சுமார் ஒரு மாத கால தடங்கல்கள், ஒத்திவைப்பு ஆகியவற்றை அடுத்து, நாசா ஆய்வு மையத்திலிருந்து புதன்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 6.03 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. வாயு கசிவு, காலநிலை சீர்கேடு, மின்னல், இடி ஆகியவற்றால் ஏவும் பணி நான்கு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகியவை உட்பட சில நாடுகள் இணைந்து விண்வெளி ஆய்வுக்கூடத்தை கட்டி வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக இந்த விண்வெளி ஆய்வுக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த விண்வெளி இல்லத்தில் ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான எல்லா நவீன வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

விண்வெளி சுற்றுச்சூழலை ஆய்வு செய்து புதிய விடயங்களை கண்டுபிடிப்பதே இந்தக் கூடத்தின் முக்கிய பணியாகும். இதில் 4 ஆய்வு அறைகளும் உள்ளன. அமெரிக்க, ரஷ்ய வீரர்கள் அடிக்கடி அங்கு சென்று ஆய்வு நடத்தி வருகிறார்கள். இந்த ஆய்வுக்கூடத்தில் ஜப்பான் தனியாக கிபோ தொகுதி ஒன்றை கடந்த ஆண்டு முதல் கட்டி வருகிறது.

ஜப்பான் விஞ்ஞானிகள் இந்த தொகுதியில் பொருத்துவதற்கான மேடையொன்றை உருவாக்கி உள்ளனர். இதை விண்வெளி கூடத்துக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. அமெரிக்காவின் எண்டுவர் விண்கலம் மூலம் அதை கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது.

கடந்த மாதமே எண்டுவர் விண்கலம் சர்வதேச விண்வெளி கூடத்துக்குச் செல்வதாக இருந்தது. திடீர் பழுது காரணமாக முதல் பயணம் தடைப்பட்டது. பருவ நிலை காரணமாக 2 தடவை எண்டுவர் பயணம் தள்ளி வைக்கப்பட்டது. இவ்வாறு நான்கு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

சுமார் ஒரு மாத போராட்டத்துக்குப் பின்னர் எண்டுவர் விண்கலம் புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. சர்வதேச விண்வெளி ஆய்வுக்கூடத்துக்கு எண்டுவர் விண்கலம் செல்வது இது 6 ஆவது தடவையாகும். இதில் சென்றுள்ள அமெரிக்க நிபுணர்கள் புதிய ஆய்வுகளை மேற்கொள்வார்கள்.

இந்தத் தடவை எண்டுவர் விண்கலம் மொத்தம் 11 நாள்கள் விண்ணில் இருக்கும். ஜப்பான் மேடை முதலில் பொருத்தப்படும். பின்னர் விண்வெளி ஆய்வுக்கூட சூரிய சக்தி பட்டரிகளை அமெரிக்க விஞ்ஞானிகள் மாற்றி புதிய பட்டரிகளைப் பொருத்துவார்கள்.

இந்த மாத இறுதியில் எண்டுவர் விண்கலம் அமெரிக்கா திரும்பும். அதன் பின்னர் அந்த விண்வெளி ஓடத்துக்கு ஓய்வு கொடுக்க நாசா விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

## அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பொருளாதார நெருக்கடி மீது விவாதம்

ஷார்ம் எல்-ஷேக்(எகிப்து), ஜூலை 17

சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதம் ஆகியவை குறித்து அணிசேரா நாடுகளின் (நாம்) தலைவர்கள் விவாதித்தனர்.

அணிசேரா நாடுகள் கூட்டமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு, எகிப்திலுள்ள ஷார்ம் எல்-ஷேக் நகரில் புதன்கிழமை தொடங்கியது. இக் கூட்டமைப்பில் தற்போது 118 நாடுகள் உள்ளன.

இக்கூட்டமைப்பின் தலைவர் பொறுப்பிலிருந்து புதன்கிழமை விலகியவரும், கியூபா ஜனாதிபதியுமான ராகுல் கஸ்ட்ரோ பேசுகையில், ''தற்போது சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள கூட்டமைப்பிலுள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

''அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும். நாடுகளுக்கிடையே சமநிலையையும், நிலையான வளர்ச்சியையும் ஏற்படுத்த நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்'' என்றும் ராகுல் கூறினார்.

'நாம்' புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் தமதுரையில், ''எனது மூன்றாண்டு பதவிக் காலத்தில் நாடுகளுக்கிடையிலான ஒற்றுமையைப் மேம்படுத்த முயற்சி மேற்கொள்வேன். உலக அமைதிக்குப் பாடுபடுவேன். சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, போர் அபாயம், அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் மாசுபாடு, அதனால் ஏற்படும் பருவநிலை மாற்றங்கள், உணவுத் தேவை, மனித உரிமைகள் மீறல் ஆகியவை தற்போது எமக்குள்ள மிகப்பெரிய சவால்களாகும்'' என்றார்.

''இவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை விவாதிக்கவே இந்த மாநாடு நடத்தப்படுகிறது. நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவோம்'' என்றும் முபாரக் கேட்டுக்கொண்டார்.

''ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 'நாம்' அமைப்புக்கு நிரந்தர இடம் வழங்க வேண்டும்'' என்று லிபியத் தலைவர் கடாபி வலியுறுத்தினார்.

# புனிதப் போருக்கு அழைப்பு விடுத்த மூவரில் இருவர் சுட்டுக் கொலை

## சீனாவின் உரும்கி நகரில் சம்பவம்

பீஜிங், ஜூலை 17

சீனாவின் உரும்கி நகரில் புனிதப் போருக்கு அழைப்பு விடுத்த 3 இஸ்லாமியர்களில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மூன்றாவது நபர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார்.

சீனாவின் உரும்கி நகரில் அண்மையில் அங்கு பெரும்பான்மையினரான இஸ்லாமியர்களுக்கும் சீனர்களுக்குமிடையே மூண்ட மோதல் கலவரமாக மாறியது. இதில் 180 இற்கும் அதிகமானோர் பலியாகினர்.

இந்த மோதலைத் தொடர்ந்து அங்கு மசூதிகளில் நடத்தப்படும் வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கும் அப்போது மேற்கொள்ளப்படும் மதப் பிரசங்கத்திற்கும் அரசு தடை விதித்தது.

இதனிடையே உரும்கி நகரில் இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து, அல் - குவைதா இயக்கம், சீனாவுக்கு எதிராகப் புனிதப் போர்ப் பிரகடனம் (ஜிகாத்) செய்தது.

இந்நிலையில், உரும்கி நகரிலுள்ள ஒரு மசூதியில் சுமார் 150 இற்கும் அதிகமானோர் பிரார்த்தனைக்காகத் திரண்டிருந்தபோது, அந்தக் கூட்டத்திலிருந்த மூன்று பேர் அம்மசூதியின் இமாம் கையிலிருந்து மைக்ரோ போனைப் பிடுங்க முயற்சித்தனர்.

அதனைத் தொடர்ந்து பச்சை நிறப் பதாகையைத் தூக்கிப் பிடித்தபடியே 'ஜிகாத்' என்று முழக்கம் எழுப்பியவாறு இதர இஸ்லாமியர்களையும் தங்களைப் பின்பற்றும்படி அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

அப்போது குழப்பம் ஏற்படுத்திய மூவரில் இரண்டுபேர் தாங்கள் வைத்திருந்த நீண்ட கத்தியை எடுத்து, அங்கிருப்பவர்களைத் தங்களுடன் வருமாறு மிரட்டினர். அத்துடன் உள்ளே நுழைந்த பொலிஸார் ஒருவரையும் பிடித்துத் தாக்கினர்.

இதனையடுத்து அம்மூவரையும் சரணடையுமாறு பொலிஸார் எச்சரித்தனர். ஆனால் அதற்குப் பலனில்லாமல் போகவே அம்மூவரையும் நோக்கிப் பொலிஸார் சுட்டனர். இதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்; ஒருவர் காயமடைந்தார். பொலிஸ் அதிகாரி ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்தார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக அரங்கில்

## லண்டன் ஏல விற்பனையில் மகாத்மா காந்தியின் கடிதங்கள்

லண்டன், ஜூலை 16

மகாத்மா காந்தி உருது மொழியில் எழுதிய 3 கடிதங்கள், அவரது கையெழுத்து இடம்பெற்றுள்ள 2 தபால் அட்டைகள், அவரே தயாரித்து கையெழுத்திட்ட கதர் துணி ஆகியவை லண்டன் நகரிலுள்ள சூத்பி மையத்தில் ஏலம் விடப்பட்டன.

இவற்றை அங்கு வசிக்கும் இந்தியர்களான சர் குலாம் காதர்பாய் நூன், நாத்புரி என்னும் 2 தொழிலதிபர்கள் 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினார்கள். ஏலத்தில் எடுத்த மகாத்மா காந்தியின் கடிதங்கள் உள்ளிட்டவற்றை இந்திய அரசிடம் தாங்கள் கையளிக்கவுள்ளனர் என சர் குலாம் காதர்பாய் நூன் கூறியுள்ளார்.

ஜவஹர்லால் நேரு கையெழுத்திட்ட 29 கடிதங்கள் மற்றும் 4 ஆட்டோ கிராப்கள், குறிப்பேடுகள் ஆகியவையும் ஏலம் விடப்பட்டன. இவை 7 லட்சம் ரூபாவுக்கு ஏலம் போயின. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் கடிதங்களும் இதர பொருள்களும் எதிர்பார்த்ததை விட அதிக தொகைக்கு ஏலம் போய் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர்களை ஒன்றாகத் திரட்டி அடுத்தக் கட்டப் போருக்குத் தயாராகுக!

## வைகோ எழுதிய புத்தக வெளியீட்டில் நெடுமாறன் பேச்சு



சென்னை, ஜூலை 17

உலகத் தமிழர்களை ஒன்று திரட்டி அடுத்த கட்டப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும் - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு எழுதிய கடிதங்களைத் தொகுத்து 'குற்றம் சாட்டுகிறேன்' என்ற தலைப்பில் தமிழிலும், 'ஐ அக்ஸ்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் புத்தகம் எழுதியுள்ளார்.

இந்த இரு நூல்களின் வெளியீட்டு விழா சென்னை ராணி சீதை அரங்கில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

விழாவுக்கு ம.தி.மு.க. பொருளாளர் மாசிலாமணி தலைமை தாங்கினார். இந்த நூல்களை தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன் வெளியிட முதல் பிரதியை கவிஞர் இன்குலாப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் அங்கு உரையாற்றியபோதே நெடுமாறன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

உலகத் தமிழர்களை ஒன்று திரட்டி அடுத்த கட்டப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். வரும் 19ஆம் திகதி இதுகுறித்து விவாதிப்பதற்காக கூட்டம் நடத்த இருக்கிறோம்.

இலங்கையில் தமிழ் ஈழம் மலர்வதற்கு வைகோ இடைவிடாமல் நடத்திய போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம் - என்றார்.

முடிவில் வைகோ ஏற்புரை வழங்கினார்.

அப்போது அவர், இலங்கையில் தமிழ் ஈழம் பெறுவதற்காக அண்ணாவின் திராவிட தமிழ் ஈழக் கோரிக்கையை மீண்டும் எழுப்புவோம். தமிழ் ஈழம் மலர எல்லா வகையிலும் தோள் கொடுப்போம் என்று சூளுரை ஏற்க வேண்டும் - என்றார்.

விழாவில் இந்தியக் கம்னியூஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சி.மகேந்திரன், ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத், விடுதலை ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# தனுஷ்கோடிக் கடலில் மீனவரின் சடலம் மீட்பு

இராமேஸ்வரம், ஜூலை 17

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று மாயமான நான்கு மீனவர்களில் ஒருவரது உடல் தனுஷ்கோடி மணல் திட்டில் ஒதுங்கியது. மற்ற மூன்று மீனவர்களை தேடும் பணியில் மீன்துறையினர் ஈடுபட்டு உள்ளனர்.

தனுஷ்கோடி கடற்கரையிலிருந்து கடந்த 13 ஆம் திகதி இராமேஸ்வரம் நடராஜபுரத்தைச் சேர்ந்த ராஜா என்பவருக்குச் சொந்தமான படகில் மீனவர்கள் செந்தில்குமார், முனியராஜ், நாகநாதன் மற்றும் முந்தல் கிராமத்தைச் சேர்ந்த அசோக்குமார் மீன்பிடிக்கச் சென்று இதுவரை கரைதிரும்பவில்லை.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் தனுஷ்கோடியில் மீன்துறை அதிகாரிகள் மணல் திட்டில் மீனவர் அசோக்குமாரின் சடலத்தை மீட்டுள்ளனர். மற்ற மூன்று மீனவர்களின் நிலை என்னவென்று தெரியாத நிலையில், காணாமல் போன மீனவர்களைத் தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



எகிப்தில் நடக்கும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானியும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் சந்திப் பேசி கைலாகு கொடுத்தபோது.......

## இந்திய - தமிழகப் படைகளின் கூட்டு நடவடிக்கையால்

# மீனவர் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் ஓரளவு கட்டுப்பாட்டில் என்கிறார் டி.ஜி.பி. ஜெயின்!

சென்னை, ஜூலை 17

இந்தியக் கடற்படையினரும் தமிழகக் கடலோர காவல் படையினரும் இணைந்து எடுத்த கூட்டு நடவடிக்கை காரணமாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க 815 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

- இவ்வாறு தமிழக சட்டம் - ஒழுங்குப் பொலிஸ் டி.ஜி.பி. கே.பி.ஜெயின் தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இவற்றைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடந்தது. இதற்காக தமிழக பொலிஸ் துறையை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் பாராட்டியுள்ளது. கடந்த 6 மாத காலத்தில் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் சாதி மற்றும் இன-மோதல்கள் எதுவும் நடைபெறவில்லை.

மதுரையில் 13 எவர்சில்வர் கூஜா வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு 19 பேர் கைது செய்யப்பட்டனர். இதனால் மிகப்பெரிய சாதி மோதல் தடுக்கப்பட்டது.

பொலிஸார் எடுத்த தீவிர நடவடிக்கை காரணமாக 37 வருடம் தலைமறைவாக இருந்த நக்சலைட்டுகளான தமிழ்வாணன், சிவலிங்கம், சுவாமிநாதன் ஆகியோரும், 22 வருடங்கள் தலைமறைவாக இருந்த கோபால் என்பவரும் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

இந்தியக் கடற்படையினரும் தமிழகக் கடலோர காவல் படையினரும் இணைந்து எடுத்த கூட்டு நடவடிக்கை காரணமாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நக்சலைட்டுகள் மற்றும் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் கடல் வழியாக ஊடுருவலைத் தடுக்க 1076 கிலோ மீற்றர் நீளமுள்ள தமிழகக் கடலோர பகுதியில் 591 கிராமங்களில் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன - என்றார்.

# மதுரையில் நாளை சீமானின் 'நாம் தமிழர்' ஈழப் போராட்டம்

மதுரை, ஜூலை 17

இலங்கையில் முள்வேலிக்குள் முடங்கிப் போயிருக்கும் மூன்று லட்சம் தமிழர்கள் தன் மானத்துடன் வாழ, இயக்குநர் சீமான் தனது அடுத்த கட்ட போராட்டத்தை மதுரையில் தொடங்கியிருக்கிறார்.

அவர், நாளை 18 ஆம் திகதி மதுரையில் 'நாம் தமிழர்' என்ற பெயரில் ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்தை நடத்துகிறார்.

நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மதுரை ஜான்சிராணி பூங்காவிலிருந்து ஊர்வலம் தொடங்குகிறது. 6 மணிக்கு வடக்குமாசி வீதியும் மேலமாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கிறது.



இயக்குநர் மணிவண்ணன், அருட்தந்தை ஜெகத்கஸ்பர், மருத்துவர் எழிலன், கவிமுழக்கம் சாகுல் ஹமீது இவர்களுடன் சீமானும் பொதுக் கூட்டத்தில் ஈழப்பிரச்சினை பற்றிப் பேசுகிறார்.

இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் இந்த எழுச்சிமிகு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

முட்கம்பிக்குள் அடைக்கப்பட்ட தமிழனின் அடிப்படை உரிமையைப் பெற்றுத்தர நடத்தப்படும் இப் பொதுக்கூட்டம் வெற்றி பெற அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

# தீவிரவாதிகளுக்கு எந்த நாடும் ஆதரவு தெரிவிக்கக் கூடாது!

## அணிசேரா நாடுகள் மாநாட்டில் மன்மோகன் சிங் வலியுறுத்து

கெய்ரோ, ஜூலை 17

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும். தீவிரவாதிகளுக்கு எந்த நாடும் ஆதரவு அளிக்கக் கூடாது. தீவிரவாதிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அழிக்க வேண்டும் - என்று அணிசேரா நாடுகள் மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

எகிப்தில் நடக்கும் அணிசேரா நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தீவிரவாதம் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. எனவே தீவிரவாதிகளுக்கு எந்த நாடும் ஆதரவு அளிக்கக் கூடாது. கடந்த சில ஆண்டுகளாக தீவிரவாதக் குழுக்கள் நவீன வசதிகளுடனும், மிகுந்த கட்டமைப்புடனும் செயற்படுகின்றன. அவற்றின் அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளது.

தீவிரவாதிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அழிக்க வேண்டும். தீவிரவாதிகளையும், அவர்களுக்கு உதவி செய்பவர்களையும் பிடித்து நீதியின் முன்நிறுத்தித் தண்டிக்க வேண்டும்.

அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்க வேண்டும். தீவிரவாதத்தை ஒடுக்க சர்வதேச அளவிலான மாநாட்டை நடத்த வேண்டும் என்ற யோசனையை ஐ.நா. சபை மாநாட்டில் இந்தியா தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் தற்போது பொருளாதாரம் மற்றும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையை நாம் மிகவும் கவனத்துடன் கையாண்டு நெருக்கடியில் இருந்து மீள வேண்டும். இல்லையேல் நீண்டகாலப் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் - என்றார்.

# உணவுக் கலப்படத்தில் ஈடுபடுபவர்களை நிறுத்திவைத்து சுட்டுக் கொல்லவேண்டும்

## கல்யாண் சிங் ஆவேசம்

உணவுக் கலப்படத்தில் ஈடுபடுவோரை திறந்தவெளி சதுக்கத்தில் நிறுத்திவைத்து சுட்டுக்கொல்ல வேண்டும் - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கல்யாண் சிங் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

உணவுக் கலப்படம் என்பது மோசமான செயல். இந்தச் செயலில் ஈடுபடுவோர் மக்களின் உயிரோடு விளையாடுகின்றனர். இதுபோன்றவர்களைச் சும்மா விடக்கூடாது - என்றார்.

இந்நிலையில் கல்யாண் சிங்கின் கருத்து குறித்து காங்கிரஸ் எம்.பி. ரஷீத் ஆல்வி கூறுகையில் -

உணவுக் கலப்படத்தில் ஈடுபடுவோருக்கு எதுபோன்ற தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோருகிறார்களோ அதே தண்டனையை இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பவர்களுக்கும் அளிக்க வேண்டும்.

அதேசமயம், நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் உணவுக் கலப்படத்தில் ஈடுபடுவோருக்கு உரிய தண்டனை வழங்குவது அவசியம் - என்று தெரிவித்தார்.

இக்கருத்து குறித்து முலாயம் சிங் கூறுகையில் -

உணவுக் கலப்படத்தில் ஈடுபடுவோரை சுட்டுக்கொல்ல வேண்டும் என்று கல்யாண் சிங் கூறுகிறார் என்றால் அதற்கு உண்மையிலேயே குற்றவாளிகளைச் சுட்டுக்கொல்ல வேண்டும் என்று அர்த்தமில்லை. தவறு செய்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் என்றே பொருள் - என்றார்.

# பாதுகாப்புக்கு நக்ஸல்கள் பெரும் சவால் இரும்புக்கரம் கொண்டு அவர்களை ஒடுக்குவோம்

## ப.சிதம்பரம் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 17

நக்ஸலைட்டுகளை ஒடுக்க இராணுவ ஆலோசகர் நியமிக்கப்படுவார் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

நக்ஸல்களின் அச்சுறுத்தல்கள் குறித்து பல ஆண்டுகளாக நாம் குறைவாகவே மதிப்பிட்டு வந்துள்ளோம் என்றும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

மாநிலங்களவையில் புதன்கிழமை ஒரிசா மற்றும் சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் நக்ஸல்களுக்கு எதிராக எடுக்கப்பட்டு வரும் கூட்டு நடவடிக்கைகள் குறித்துப் பேசிய ப.சிதம்பரம் மேலும் கூறியவை வருமாறு -

நக்ஸல்களை ஒடுக்க மாநில அரசுகளுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவோயிஸ்ட்டுகள் மற்றும் நக்ஸல்கள் முழுமையாக ஒடுக்க இராணுவ ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய சவாலாக நக்ஸல்களை உருவெடுத்து வருகின்றனர். இதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு மத்திய அரசு அவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கும். இது தொடர்பாக இப்போதே அனைத்து விவரங்களையும் கூற முடியாது.

நக்ஸல்கள் ஆதிக்கமுள்ள மாநில முதல்வர்களுடன் பேசிவருகிறேன். அவர்களுடன் ஓகஸ்ட் மாதம் சந்தித்துப் பேசி நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படும்.

நக்ஸலால் எதிர்காலத்தில் எத்தகைய பாதிப்புகள் உருவாகும் என்பதை பல ஆண்டுகளாக நாம் கணிக்காமல் விட்டு விட்டோம். அவர்களை குறைத்து மதிப்பிட்டதால் தற்போது வலுவடைந்து விட்டனர் - என்றார்.

ஒரிசாவில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு இல்லை என்றும் சிதம்பரம் மாநிலங்களவையில் கடந்த புதன்கிழமை கூறினார்.

ஒரிசாவில் வன்முறை பாதித்த கந்தமால் மாவட்டத்தில் சுமார் 800 முதல் 900 பேர் இன்னமும் நிவாரண முகாம்களில்தான் உள்ளனர். அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. சிறு[illegible] வைத்துத் தாக்கு[illegible] என்றார்.

# தனது நண்பிக்கு காந்தி அளித்த புத்தர் சிலை செப்டம்பரில் ஏலம்

மும்பை, ஜூலை 17

மகாத்மா காந்தி தனது நண்பியான ஐரிஷ் நாட்டுப் பெண்மணிக்குப் பரிசாக வழங்கிய புத்தர் சிலை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஏலம் விடப்படவுள்ளது.

ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர் எம்மா ஹார்கர். [illegible] இருந்தவர். இவரது மருமகன் இந்தியாவில் பணியாற்றினார். எம்மா ஹார்கர் முன்னர் ஒரு சமயம் தனது மகள் மற்றும் மருமகனுடன் தங்கியிருப்பதற்காக இந்தியாவுக்கு வந்திருந்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான், மகாத்மா காந்தி புத்தர் சிலையை எம்மா ஹார்கருக்குப் பரிசாக வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அந்தப் புத்தர் சிலை 13 அங்குல உயரத்துடன் அமர்ந்திருப்பது போன்ற நிலையில் உள்ளது. இந்தப் புத்தர் சிலை வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஏலம் விடப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல் சந்தர்ப்பவாதிகளால் இப்போது தவறான பாதையில் கொண்டு செல்லப்படுகிறது

## விசனம் தெரிவிக்கிறார் மங்கள சமரவீர



கொழும்பு, ஜூலை 17

இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகிகளாக அரசியல் சந்தர்ப்பவாதிகளே செயற்படுவதனால் கட்சியின் உன்னதமான கொள்கைகள் சிதறடிக்கப்பட்டு, ஏகாதிபத்திய கொள்கையுடன் அது வேறுபாடான ஒரு திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளர் மங்கள சமரவீர நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

பல்வேறு உன்னதக் கொள்கைகளைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று சிறுபான்மையினரை ஆட்டிப் படைக்கும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியாக மாறி வருகிறது.

சுதந்திரக் கட்சி ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அவருக்குப் பின்னர் அக்கட்சியை அவரது பாரியார் சிறிமாவோ பண்டாரநாயக்க பொறுப்பேற்று, கட்சியின் ஊடாக நாட்டு மக்களுக்குப் பல சேவைகளைச் செய்தார்.

இக்கட்சியைச் சிதறடிக்கப் பல சதித் திட்டங்கள் பலராலும் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக இராணுவப் புரட்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க, கட்சியின் வளர்ச்சிக்கும் நாட்டு மக்களுக்கும் பல சேவைகளைச் செய்தார். கட்சி உறுப்பினர்கள் முன்னணியில் திகழ பல சந்தர்ப்பங்களை அவர் வழங்கினார்.

### சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் சிதறடிப்பு

1956 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தனது கட்சி ஜனநாயகம், சுதந்திரமாகக் கருத்தை வெளியிடும் மனித உரிமை போன்ற உன்னதக் கொள்கைகளுடன் அமைக்கப்பட்டதாகக் கூறியிருந்தார். ஆனால், இன்றோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அந்த உன்னதக் கொள்கைகள் சிதறடிக்கப்பட்டுவிட்டன. நாட்டில் இதுவரை 11 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அநேகமான ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுதந்திரக் கட்சி ஆட்சி செய்யும் இக்காலப் பகுதியிலேயே மேலும் அதிகமான ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்ட பெருமை படையினரையே சாரும். ஆனால் குறிப்பிட்ட குடும்பத்தினர் மட்டுமே இந்தப் பெருமையைத் தமதாக்கிக் கொள்ள முற்படுகிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை குறித்துப் பேசப்பட வேண்டும். மேலும் சந்திரிகா அம்மையாரின் காலத்தில்தான் யாழ். மாவட்டம் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டது. இதுபற்றியும் பேசப்பட வேண்டும் - என்றார். (அ-சி)

# டி.கே. பட்டம்மாள் 90 வயதில் காலமானார்



சென்னை, ஜூலை 17

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் டி.கே.பட்டம்மாள் நேற்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது90. சிறிது காலமாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார் பட்டம்மாள்.

கிட்டத்தட்ட 65 ஆண்டுகள் கர்நாடக இசையில் கொடிகட்டிப் பறந்தார். இவரது சம கால கலைஞர்களான எம்.எஸ். சுப்புலட்சுமி மற்றும் எம்.எல். வசந்தகுமாரிக்கு மிகச்சிறந்த போட்டியாளராகத் திகழ்ந்தார் பட்டம்மாள்.

அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன் என உலக நாடுகள் பலவற்றில் கச்சேரிகள் நடத்தியவர் பட்டம்மாள். பல திரைப்படங்களில் பன்னணியும் பாடியுள்ளார். கமலஹாஸனின் 'ஹே ராம்' படத்தில் வைஷ்ணவ ஜனதோ பாடலை பாடியுள்ளார் பட்டம்மாள்.

இந்திய அரசின் 'பத்ம பூஷண்' மற்றும் 'பத்ம விபூஷன்' விருதுகளையும், சங்கீத நாடக அகாடமி விருது, சங்கீத சாகர ரத்னா விருது மற்றும் சங்கீத கலாநிதி விருதினையும் பெற்றவர் பட்டம்மாள். இவரது சகோதரர் டி.கே. ஜெயராமனும் மிகப் பெரிய கர்நாடக இசைக் கலைஞர்.

பாடகி நித்யஸ்ரீ மகாதேவன் இவருக்கு பேர்த்தி முறையாவார். (1)

# கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் தமிழ்க் கூட்டமைப்பு கலந்துரையாடும்

## அரியநேத்திரன் எம்.பி. கூறுகிறார்

கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக நடத்தும் கவனயீர்ப்புப் போராட்டம் குறித்து அரசு கவனத்தில் எடுக்காதமை கவலையையும், வேதனையையும் தருகின்றது. இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரத்து 250 பட்டதாரிகள் மட்டக்களப்பு நகர பஸ் தரிப்பிடச் சூழலில் இரவு பகலாக மிகவும் பரிதாபகரமாகவும், தார்மீக அடிப்படையிலும் கடந்த இரண்டு வாரங்களாக கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பட்டம் பெற்றாலும், பாதை ஓரங்களில் இருந்து போராட்டம் நடத்தினால் மட்டுமே வேலை வழங்கப்படும் என்ற எழுதப்படாத சட்டம் இலங்கையில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதை, கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் இந்தப் போராட்டம் உறுதிப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராகிய நாம் இந்தப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்கிறோம் - மதிக்கிறோம். ஆனால், எம்மால் எந்த வாக்குறுதிகளோ, உறுதிமொழிகளோ வழங்கமுடியாமையிட்டு வருந்துகிறோம்.

'கிழக்கின் உதயம்' புதுப்பொலிவு பெற வேண்டுமாக இருந்தால், கிழக்கின் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டத்தின் நியாயத்தன்மையை விளங்கி, சகல பட்டதாரிகளுக்கும் உடனடியாக வேலை வழங்குவதே ஒரேவழி - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பஸ் சாரதி ஆயுதமுனையில் தாக்கப்பட்டார்; மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்து பாதிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 17

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பஸ் டிப்போக்களில் சேவையாற்றும் சாரதிகள் நேற்றுக் காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மாவட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ் சாரதியொருவர் கடமையின்போது கிரான்குளத்தில் வழிமறித்து ஆயுத முனையில் தாக்கப்பட்ட சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்தும், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என்று கோரியும் இந்த வேலை நிறுத்தத்தில் சாரதிகள் ஈடுபட்டுள்ளனர் என மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பின்னால் வந்துகொண்டிருந்த தமது வாகனத்திற்கு வழிவிடவில்லை என்று கூறி ஆத்திரமடைந்த நிலையில், சம்பந்தப்பட்ட நபர்கள் சாரதியின் வாய்க்குள் துப்பாக்கியை வைத்து அவரைத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி தான் சேவையாற்றும் மட்டக்களப்பு டிப்போவிற்கு இது குறித்து அறிவித்ததையடுத்து, அந்த டிப்போவில் சேவையாற்றும் சகல சாரதிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஏனைய டிப்போக்களிற்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பஸ்கள் தற்போது டிப்போக்களில் நிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தத்தை கைவிடச்செய்வது தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள், இ.போ.ச. அதிகாரிகள் ஆகியோர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர். அப்பேச்சுக் களில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணமும் கலந்துகொண்டார்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸாரால் உறுதியளிக்கப்பட்டு, சாரதிகளை வேலைக்குத் திரும்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் சாரதிகள் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர். (அ-சி)

# நாளை நடமாடும் சேவையில் அடையாள அட்டைகள் சகல பகுதி மக்களும் பங்குபற்றுவதற்கு வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 17

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டிலான நடமாடும் சேவை நாளை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் சகல பகுதி மக்களும் பங்குபற்றலாம்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான நடமாடும் சேவை இன்று யாழ். திவ்விய ஜீவன மண்டபத்தில் இடம்பெறுகின்றது. அதன் தொடர்ச்சியான நடமாடும் சேவை நாளை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் கம்லத் தலைமையில் இடம்பெறும் இந்தச் சேவையில் பதிவாளர் நாயகம், ஆள்பதிவுத் திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களில் தயார் நிலையில் உள்ள2000 ஆயிரம் பேரின் அடையாள அட்டைகள் எடுத்துவரப்படுகின்றன. அவற்றை உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வாரத்தில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் அடையாள அட்டைக்கான படத்தை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்டவர்கள் மட்டுமன்றி குடாநாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றி பயன்பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (1)

# காவலில் உள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசாமி சௌந்தரராஜன்(வயது - 31) ஆகிய இந்த இரு ஊழியர்களும் வன்னியில் ஐ.நா.அலுவலகங்களில் பணியாற்றியவர்கள். கடந்த ஜூன் 13ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அது முதல் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து சட்டத்தரணி ஸ்டனிஸ்லஸ் கிளஸ்ரைனினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் அசோக என்.சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, பி.ஏ. இரட்னாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அப்போது மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.எம்.எம். சம்சுதீனின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல், மேற்படி இரு ஐ.நா.பணியாளர்களும் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அச்சமயம் அவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும், சட்டவைத்திய அதிகாரி முன்னிலையிலோ, நீதிமன்றத்தின் முன்பாகவோ அவர்கள் ஆஜர் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இருவரையும் சட்டவைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்து, மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் எதிர்மனுதாரர்களாக பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகேஷ் பண்டார, பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-சி)

# துன்பத்தில் வாடும் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபைத் தேர்தலையொட்டி, யாழ். நகருக்கு வருகைதந்த ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, ஐ.தே.கட்சியின் யாழ். மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் எஸ்.சத்தியேந்திரா ஆகியோர் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

யாழ். சிற்றி இன் ஹோட்டலில் நடைபெற்ற மேற்படி சந்திப்பின்போது திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒற்றுமையுடன் நாட்டைக் கட்டியெழுப்ப ஐ.தே.கட்சியின் செயற்குழு அதிகாரமளித்துள்ளது. ஐ.தே.கட்சி தலைமையில் அமையும் அரசு அனைத்து மக்களதும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தமிழர்களின் உதவியைக் கோரியுள்ளது. இந்த நாட்டு மக்களுக்கு ஒரேமாதிரியான நீதி கிடைக்கவேண்டும். ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும். அரசின் பொய்களுக்கு முன்னால் வாடிக்கிடக்கும் மக்களின் துயரங்கள் நீக்கப்படவேண்டும். எல்லாக் கட்சிகளும் நீதியான ஜனநாயக நாட்டை உருவாக்க முன்வர வேண்டும்.

வடக்கு யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். எமது அடிப்படை நோக்கம் இந்த அப்பாவி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டும் என்பதே.

### தமிழர் பிரச்சினை குறுகிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும்

தரைவழிப்போக்குவரத்து தடையின்றித் தொடர வேண்டும். ஏ-9 வீதியைத் திறந்து மக்களின் சுமூகமான வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டும். இதற்காக எமது கட்சி கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

2002 இல் நாங்கள் அரசைப் பொறுப்பேற்றிருந்தபோது இவ்விடயங்களுக்குரிய அமைச்சராக இருந்தவர் ஜயலத் ஜயவர்த்தன. அப்போது அவர் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு செயற்பட்டார்.


குறுகிய காலத்தில் தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகள் தேவை. ஜயலத் தலைமையில் ஐ.தே. கட்சி தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது. ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் சத்தியேந்திரா மக்களின் குறைகள் குறித்து முறையிட்டுள்ளார்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளவை அனைத்துக்கும் தீர்வு காணப்படும். தேர்தலின் பின்னர் திட்டங்கள் அனைத்தும் ஆரம்பிக்கப்படும்.

எமது ஆட்சிக் காலத்தில் மீன்பிடித் தடைகள் இங்கு இருந்ததில்லை.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை ஐ.தே.கட்சிக்கு வழங்கி அதன் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். நடக்கவிருக்கும் தேர்தலிலும் நீங்கள் ஐ.தே.கட்சியை ஆதரியுங்கள். உங்கள் பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வை எங்களால் மட்டுமே தரமுடியும் - என்றார். (அ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெய்ரோவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோரை தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# இலங்கை இராணுவத்தின் திறனை உயர்த்த உதவுவதற்கு பாக். தயார்

## ஜனாதிபதி மஹிந்தவுடனான சந்திப்பின் பின் அந்நாட்டுப் பிரதமர் தகவல்

ஷாம் எல் ஷேக், ஜூலை 17

இலங்கை இராணுவத்தின் திறனை மேலும் அதிகரிப்பதற்கு உதவத் தயார் எனப் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் தமது நாடு வருடாந்தம் இராணுவ ரீதியான இலவசப் பயிற்சிகளை அதிகளவில் வழங்கி வருகிறது எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஒக்டோபரில் கொழும்பிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சரை இலங்கை அரசு அழைத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின்போது இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையில் முழுமையான பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவது குறித்த இணக்கப்பாட்டிற்குத் தாங்கள் வந்தனர் எனவும் தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

பாகிஸ்தானும் இலங்கையும் தமக்கிடையேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையாக விஸ்தரிப்பதற்கு இணங்கியுள்ளன.

எகிப்து உச்சிமாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் புதன்கிழமை மேற்கொண்ட பேச்சுகளின்போது இது குறித்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இலங்கை பாகிஸ்தானிடமிருந்து அதிகளவு இலவச இராணுவப் பயிற்சியைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தானின் படையினர் வருடாந்தம் பெரும் எண்ணிக்கையில் பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

இலங்கைப் படைகளின் திறனை மேலும் அதிகரிப்பதற்கு உதவப் பாகிஸ்தான் தயார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சரை ஒக்டோபர் மாதம் கொழும்பிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளமையானது இருதரப்பு உறவுகளையும் மேலும் வலுப்படுத்துவதற்கு உதவியாக அமையும்.

இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்பனவற்றை பாகிஸ்தான் ஆதரிக்கின்றது. அங்கு நிரந்தர சமாதானமும் ஸ்திரத்தன்மையும் நிலவுவதை நாங்கள் விரும்புகிறோம். பாகிஸ்தானும் இலங்கையும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன - என்றார்.

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எகிப்தில் நடைபெற்ற - அணிசேரா நாடுகளின் பதினைந்தாவது உச்சி மாநாட்டில் கடந்த புதன்மாலை உரையாற்றியபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் குறிப்பிட்டார்.

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மிக விரைவில் மீளக் குடியமர்த்துவதே தமது முக்கிய இலக்கு என ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை இலங்கை தோற்கடித்ததை உலக நாடுகள் பொறாமையுடன் பார்க்கக் கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தடைகள் நாடொன்றின் மக்களையே தண்டிக்கின்றன. மக்களைத் தண்டிப்பதை சர்வதேச சமூகம் அனுமதிக்கக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தமை வருமாறு:-

உலகில் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்பை அழித்தொழிப்பதில் எமது நாடு வெற்றிபெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் அறிவிக்கிறேன்.

இது ஒரு விடுதலை அமைப்பல்ல. மாறாக தேசிய எதிர்ப்புப் போக்கையும் பயங்கரவாதத்தையும் பெருமையாகக் கொள்ளும் பிரிவினைவாதக் குழு.

### வன்முறையையும்வெறுப்புணர்வையும் விஸ்தரித்தனர்

சில நாடுகளில் இவர்களால் தமது வன்முறையையும் வெறுப்புணர்வையும் விஸ்தரிக்க முடிந்தது.

இந்த நாடுகள் புரிந்துகொள்ளக்கூடிய - ஆனால் ஏற்றுக்கொள்ள முடியாத - அரசியல் காரணங்களுக்காகத் தமக்கு ஆபத்தில்லாத இந்த அமைப்பை எதிர்ப்பதில் நேர்மையாக இருக்கவில்லை.

பயங்கரவாதம் எம் அனைவரையும் அச்சுறுத்துகின்றது. எமது நெருக்கடியான தருணத்தில் எம்முடன் இருந்த எமது நண்பர்களுக்கு - குறிப்பாக அணிசேரா அமைப்பினைச் சேர்ந்தவர்களுக்கு - நாம் நன்றி செலுத்துகின்றோம்.

இலங்கை தொடர்ச்சியாக சகல விதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் கண்டித்து வந்துள்ளது. இதனால் எமது மண்ணில் பயங்கரவாதத்தை தோற்கடித்தமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இதுகுறித்து எமது கொள்கைப்பிடிப்புள்ள நண்பர்களைப் போல உலகமும் மகிழ்ச்சியடையவேண்டும். பொறாமை கொள்ளக்கூடாது; அதிருப்தியடையக்கூடாது.

### விடுவிக்கப்பட்ட மக்களின்தேவைகளைக் கவனிக்கிறோம்

பயங்கரவாத அமைப்பைத் தோற்கடித்தமை எமது மக்களின் அடிப்படைத் துயரங்களுக்குத் தீர்வைக் கண்டதாக அமையாது.

இதன் காரணமாக இந்த விடயங்கள் குறித்துக் கவனம்செலுத்துகிறோம்.

பயங்கரவாதிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு பின்னர் எமது படையினரால் விடுவிக்கப்பட்ட 2 லட்சத்து 87 ஆயிரம் பொது மக்களின் தேவைகளை நாங்கள் தற்போது கவனிக்கிறோம்.

இந்த மக்களைத் தமது பகுதிகளுக்கு மீள அனுப்பி அவர்களின் வாழ்வாதாரத்தை மீள ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கம். - என்றார் ஜனாதிபதி.(அ-சி)

## மீளக் குடியமர்த்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு விஜயம் செய்வார்.

கெய்ரோவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்கு வந்திருந்த வேளை இலங்கை ஜனாதிபதியை அவர் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர் அகதிகளின் மீளக்குடியமர்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அவதானிப்பதற்காகத் தாம் இலங்கை செல்லவுள்ளதாகக் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்த்தும் பணிகள் மற்றும் வடக்கை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றை முன்னெடுப்பதை அனைத்துக் கட்சிகளின் தெரிவுக் குழு முழுமையாக பங்களிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா செய லாளர் நாயகத்தை சந்தித்தபோத எடுத்துக் கூறியிருந்தார்.

## மருமாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடு அன்னையின் உற்சவத்தில் சகல பகுதி மக்களும் பங்குபற்றும் போது தான் சமாதானம் கிட்ட அருள் கிடைக்கும்.

தெற்கில் இருந்து மக்கள் அங்கு செல்ல ஏற்பாடு செய்யும் அரசு, வடக்கில் உள்ள மக்கள் அங்கு செல்ல வசதி எதையும் இதுவரை செய்யவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து கத்தோலிக்க, மக்கள் செல்ல வசதியாக ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும். அந்தப் பாதையூடாக மக்கள் மடுவுக்கு செல்வதற்கு முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் -என்று அவர் தெரிவித்தார்.

வடக்கின் செயலணியின் தலைவரான ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவுடன் இது தொடர்பாக தாம் பேச உள்ளதாகவும் ஜயலத் தெரிவித்தார். (அ-1)

## வடமாகாண புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை, வரோதய நகரில் உள்ள கண்ணியா வீதியில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று காலை 9 மணிக்கு அவர் பதவி யேற்கின்றார்.

இந் நிகழ்வில் வட மாகாண சபையின் செயலா ளர்கள், மத்திய அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

## யாழ்ப்பாணம், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் பணிபுரியவிருக்கும் 15 ஆயிரம் கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சி, வாக்காளர்களுக்கு அறிவுரை வழங்கும் துண்டுப்பிரசுரம் வெளியிடல், தேர்தல் தினத்தன்றும் முதல் நாளும் பணியாற்றல் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

இந்த உதவி குறித்த உடன்பாட்டில் 'பவ்ரல்' அமைப்பின் பிரதி தலைவர் உஸ்வந்த ஆராச்சியும் கொழும்புக்கான ஜப்பான் தூதர் குனியோ தக்காசியும் கைச்சாத்திட்டனர். (அ-1)


**தேவை**

கடை ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை.
பரணி தொழில்நுட்ப சேவை
166, நாவலர் வீதி, யாழ். T.P - 222 7442

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA.
2009 A/L பரீட்சைக்கு
தோற்றும் மாணவர்களுக்கான
உயிரியல் கருத்தரங்கு
காலம் :- யூலை 18, 19, 20 ஆம் திகதிகளில்
நேரம் :- காலை 8.00 - 10.30
சுப்பிரமணியம் பொன்திவாகரன்

**விற்பனையாகிறது**

1, A/L - Biology
By- Raven Johnson
2, Advanced Biology
D.G.Mackean
3, Biological Science
Green
4, Aanatomy and Physiology
Ross ard wilson
5, Advanced Physics - Tomduncan
6, Advanced Physias -
Keith Gipps
7, Chemistry - Richard Harwood
8, Advanced Chemistry
Philipmatthews
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். தொ.பே. 6693, 4374, 2422

**தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்**
BIT DIT⇒HDIT⇒BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது Closing Date 20.07.2009
A/L 2009 பரீட்சைக்கு தோற்றவுள்ள (கலை,வர்த்தக,விஞ்ஞான) மாணவர்களும், அரச, வங்கி ஊழியர்களும்,விண்ணப்பிக்கலாம்
- பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படுகின்றன.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப் பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- விரிவுரைகள் யாவும், அனுபவம் வாய்ந்த கணனி விஞ்ஞான பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன.

Further More,MCS offers
** Computer Engineering to BIT students. You also achieve MCP & MCTS Professional membership from MICROSOFT *
**COMTIAA+,ICDL (Computer Driving License)module totally free
**CISCO-CCNA Course fees free *E-learning facilities also available
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில் MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

**வெளிவந்துவிட்டது**
(Speed Marketing)
2008 - 2009 O/L பனரச (ORIGINAL)
55 வினாப்பத்திரங்கள் 5 - பாடங்கள்
உள்ளடக்கியது. புள்ளித்திட்டம்,
விடைத்தாள், வரைபுத்தாள், பல்தேர்வு
விடைத்தாள், 2009 - பரீட்சைக்கு
தோற்றவுள்ள மாணவர்கள் சுயமாக தம்மை
தயார் படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டது.
அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

**Diploma in English**
50% off
★ Spoken with Grammar.
★ Phonetics Practices.
★ Computer Based Practices
★ Practice Exercises.
★ Spoken Practices.
★ Letter Writing.
★ Listening..
பதிவுகளை 19.07.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS
www.mcsitcampus.com Supported By UNDP/JRRP

**யாழ்.மாணவர்களே.......!**
கணனி கல்வித்துறையில் ஒரு புதிய அத்தியாயம் உதயமாகின்றது
வெகு விரைவில் எதிர்பாருங்கள் உங்கள் மண்ணில்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.